நிறுவனத்தின் பெயர்	:	நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்	:	182

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 182

அரச கணக்குகள் பற்றிய செயற்குழு

உள்ளடக்கம்

தொடர் இலக்கம்.	நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள்	பக்க இலக்கம்
1.	இலங்கை மதுவரித் திணைக்களம்	1
2.	இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களம்	16
3.	இலங்கை சுங்கம்	26
4.	வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத்திணைக்களம்	35
5.	வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்	38
6.	கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்	41
7.	தேசிய திட்டமிடல் திணைக்களம்	42
8.	உள்நாட்டு இறைவரித் திணைக்களம்	44
9.	வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு	55
10.	அரசிறைக் கொள்கைத் திணைக்களம்	57

திணைக்களத்தின் பெயர் : இலங்கை மதுவரித் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 182

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

மதுவரித் திணைக்களம்
2022 ஏப்ரல் 19

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
<u>உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மதுபானங்களின் தரம்</u> பொது மக்களின் சுகாதார பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டு உள்நாட்டுச் சந்தையிலுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மதுபானங்களின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு மதுவரித் திணைக்களம் மேற் கொண்டுள்ள நடவடிக்கைகள். அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம் மற்றும் கைத்தொழில், தொழில் நுட்ப நிறுவனத்தின் ஆதரவுடன் மதுபானங்களின் தரத்தைப் பராமரிக்க திணைக்களம் செயல்பட்டு வருவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரிவித்தார். உள்நாட்டில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபானம், பியர் ஆகியவற்றுக்கான தரநிலைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், உலகில் முதன்முறையாக செயற்கை கள்ளுக்கான தரத்தினைத் தயாரிக்கும் ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பிர.கண.அலு./ கணக். அலு. தெரிவித்தார். இதுதவிர, மதுவரி அலுவலர்களுக்கான பயிற்சி, சட்டவிரோத மதுபானங்களை சுற்றிவளைத்தல், மதுபான விலக்கு கிராமங்களை அமைத்தல், மதுபான மற்றும் போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டங்களை செயல்படுத்துதல் பற்றியும் கணக். அலு.. வெளிப்படுத்தினார்.	தற்பொழுது இலங்கை மதுவரித் திணைக்களம், அரச பகுப்பாய்வாளர் திணைக்களம், இலங்கைத் தரநிர்ணய நிறுவனம் மற்றும் அதனுடன் இணைந்த கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் அதன் நிபுணர் குழுவினர் என்பவற்றால் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தூய்தாக்கப்பட்ட மதுசாரம், அற்ககோல், சாராயம், பியர் மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சகல வெளிநாட்டு மதுபானங்கள் என்பவற்றிற்கு முறையான தரங்கள் இனங்காணப்பட்டன. இத்தரங்கள் பற்றி இலங்கை மதுவரித் திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் சகல மதுபான உற்பத்தியாளர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இது தொடர்பில் எடுக்க வேண்டிய சட்ட நடைமுறைகள் மற்றும் களப் பரிசோதனைகள் என்பன தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. கள்ளிற்கான தரங்களைத் தயாரித்தல் பற்றிய ஆய்வு தற்போது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்தரங்களை எதிர்காலத்தில் வர்த்தமானியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மற்றும் கலந்துரையாடல்கள் உரிய பிரிவுகளுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மதுபான உற்பத்தி நிறுவனங்களால் உற்பத்திகளை சந்தைப்படுத்துகையில் சந்தையின் ஏகபோகத்தைத் தடுப்பதற்காக இலங்கை மதுவரித் திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் பொருட்டு சகல மதுபான உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனை நிலையங்களிற்கும் அறிவுறுத்தல்களை தலைமை அலுவலகத்தின் ஊடாக அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
<u>மதுபானங்களின் தரத்தைப் பரிசோதிப்பதற்காக ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ள இரசாயன ஆய்வு கூடம்</u> பொதுக் கணக்குகள் பற்றிய குழு (COPA) வழங்கிய கட்டளையின் படி, போதைப்	இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு முழுமையான இரசாயன ஆய்வுகூடம் ஒன்றை நிர்மாணிக்கும் பொருட்டு 2023 இன் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது ஆய்வுகூடம்

பொருட்களின் தரத்தை சரிபார்க்க 2021 ஆம் ஆண்டில் இரசாயன ஆய்வகூடம் ஒன்றை நிறுவ எதிர்பார்க்கப்பட்டது, ஆனால் அதைச் செய்ய இயலவில்லை என்றும் அது இந்த ஆண்டு (2022) மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் பி.கண.அலு./ கண.அலு. வெளிப்படுத்தியிருந்தார். இதற்கான அதிக செலவை ஈட்டுவதில் உள்ள சிரமமே இந்த தாமதத்திற்கு காரணம் என்றும் அவர் கூறியிருந்தார். நிதியமைச்சின் அனுமதியுடன், மதுவரி திணைக்களத்தின் வெகுமதி நிதியிலிருந்து(Reward Fund) இதற்கான ஏற்பாடுகளைப் பெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் பி.க.அ./கண.அலு. வெளிப்படுத்தியிருந்தார்.. இந்த இரசாயன ஆய்வுகூடத்தை நிறுவுவதன் மூலம் தரமான மதுபானங்களை சந்தைக்கு வெளியிடுவதுடன், சட்டவிரோத மதுபானங்கள் மீதான சட்ட நடவடிக்கை துரிதப்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.	தாபித்தல் தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 1. கட்டடம் இனங்காணப்பட்டுள்ளது. 2. பகுதி பிரித்தல்(partition) பொருட்டு பெறுகை முடிவடைந்துள்ளது. 3. இரசாயன ஆய்வுகூடத்திற்கான ஆலோசனை பொருட்டு முதல் சுற்றுக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. 4. T.O.R. (Team of Reference) தயாரித்தல் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 5. அதற்கிணங்க வேலைத்திட்டம் சம்பந்தமான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
<u>2022 ஆம் ஆண்டின் 01 ஆம் காலாண்டின் செயலாற்றுகை.</u> 2021, 2022 களின் முதல் காலாண்டை ஒப்பிடுகையில், அண்ணளவாக முறையே ரூ. 37 பில்லியன் மற்றும் 42 பில்லியன் வருமானம் கிடைத்துள்ளது, அதன்படி இந்த ஆண்டு வருமானத்தில் தெளிவான உயர்வைக் காணலாம் என கண. அலுவலர் சுட்டிக்காட்டியுள்ளார். வரி விகிதங்களின் அதிகரிப்பு வருமானத்தில் சில தாக்கங்களை ஏற்படுத்தினாலும், உற்பத்தி மற்றும் வருமான வளர்ச்சி வீதம் முறையே 9% மற்றும் 17% அதிகரித்துள்ளதென கண.அலு. மேலும் குறிப்பிட்டுள்ளார். தற்போது நாட்டுக்கு எதனோல் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளதாக குழுவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக, நாட்டில் நிலவும் போக்குவரத்து சிரமம் காரணமாக, மதுபான உற்பத்திக்கு தேவையான தூய்தாக்கப்பட்ட மதுசார உற்பத்தி பொருட்டு கரும்பு, தொழிற்சாலைகளுக்கு போதிய அளவில் வழங்கப்படாமையால், நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இங்கு குறிப்பிடப்பட்டது. இவ்வாறான பிரச்சினைக்குரிய நிலைமைகள் ஏற்படாவிடின், மதுபான உற்பத்திக்கு ஏற்ற அளவில் தூய்தாக்கப்பட்ட மதுசார உற்பத்தியை இந்நாட்டில் மேற்கொள்ள முடியும் எனவும் குழுவில் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.	2022 இல் நிலவிய எரிபொருள் நெருக்கடியால், உற்பத்திச்சாலைகளுக்கு போதிய கரும்பு கிடைக்கப்பெறாமை, சோள இறக்குமதி நிறுத்தப்பட்டமை மற்றும் டொலரின் பெறுமதி உயர்வடைந்தமையால் இறக்குமதிச் செலவு அதிகரித்தமை போன்ற காரணங்களால் மதுசார உற்பத்தி பெருமளவில் பாதிப்படைந்தது. அத்தகைய பிரச்சனைகள் இல்லாத போதிலும் கூட, இறக்குமதி தவிர்ந்த உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தூய்தாக்கப்பட்ட மற்றும் தென்னம், பனம் மதுசாரங்களை உள்நாட்டு மதுபான உற்பத்திக்கு பயன்படுத்த இயலும் என்பதுடன், தற்பொழுது சில வடிசாலைகளில் மதுசாரம் மிகையாகக் காணப்படுகிறது. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் மதுபானத் தேவையை ஈடுசெய்யக்கூடிய மதுசார உற்பத்தியை உள்நாட்டில் உற்பத்தி செய்யும் இயலுமை காணப்படுகிறது. மேலும், இதற்காக உள்நாட்டு மதுசார உற்பத்தியை அதிகரிக்க வேண்டியதுடன் உற்பத்தி செய்யப்படும் மதுசாரங்களின் தரத்தையும் மேம்படுத்த வேண்டிய தேவை காணப்படுகிறது. அதன் பொருட்டு வடிசாலைகளில் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்த வேண்டியதுடன் மதுசார உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் அளவையும் அதிகரிக்க வேண்டியுள்ளது.

பதவி வெற்றிடங்கள் 2021.12.31 ஆம் திகதியில் திணைக்களத்தில் 102 மதுவரிக் காவலாளர் பதவிகள் உள்ளிட்ட 352 பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றமை **பரிந்துரை** அரச வருமானத்தில் அதிகப் பங்களிப்பை வழங்கும் மூன்று முக்கிய அரசு நிறுவனங்களில் மதுவரித் திணைக்களமும் ஒன்று எனச் சுட்டிக்காட்டிய பொதுக் கணக்குகள் பற்றிய குழு, அரச வருமானத்தை அதிகரிப்பதற்கு பணியாளர் வெற்றிடங்களை நிரப்புவது இன்றியமையாதது என்பதால் விரைவாக வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு பிர.கண.அலு. இற்கு கட்டளையிட்டது. திணைக்கள அலுவலர்களுக்கு இலக்குகளை வழங்கி, சட்டவிரோத மதுபானம்/ போதைப் பொருள்களை சுற்றிவளைக்கும் பணியை மேற்கொண்டு வருவதாகவும், திணைக்களத்தில் அலுவலர் பற்றாக்குறையினால் இந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் கண.அலு. அறிவித்திருந்தார்.	இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமையைத் தெரிவித்துக் கொள்கிறேன். **சிரேஸ்ட நிலை** (I) மதுவரி அத்தியட்சகர் பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 08 பதவிகள் பொருட்டு 2023 யூலை இல் பரீட்சைகள் திணைக்களத்தால் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (II) பிரதி மதுவரி ஆணையாளர் பதவிகளிற்கு பதவி உயர்த்துவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (III) அர.நிர்.சுற். 22/19 இன் பிரகாரம், 60 வயதைப் பூர்த்தி செய்த அடிப்படையில் 2022.12.31 ஆம் திகதி உதவி மதுவரி ஆணையாளர், பிரதி மதுவரி ஆணையாளர், மதுவரி ஆணையாளர் மற்றும் மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம் ஆகிய பதவிகளிலுள்ள அலுவலர்கள் ஓய்வு பெற்றமையால் 25 பேர் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களில் 08 அலுவலர்கள் மாத்திரமே எஞ்சியுள்ளனர். எனவே, 04 உதவி மதுவரி ஆணையாளர்களினை முழு நேரமாக பிரதி மதுவரி ஆணையாளர்களின் பதில் கடமைப் பணிகளின் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறே, மதுவரி அத்தியட்சகர்களை, வெற்றிடமாக உள்ள 10 உதவி மதுவரி ஆணையாளர்களின் பொருட்டு முழுநேரப் பணிகளைச் செய்ய நியமிக்கப்பட்டனர். உரிய நியமனங்கள் தொடர்பில் அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன (IV) உதவிப் பணிப்பாளர்(தகவல் தொழில்நுட்பம்) பதவிக்கு பொருத்தமான அலுவலரைப் பெற்றுத் தருமாறு எனது ED/02/03/18 ஆம் இலக்க 2021.10.27 மற்றும் 2022.01.06 ஆம் திகதிய கடிதங்கள் மூலம் நிதி அமைச்சுச் செயலாளர் ஊடாக அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரிற்கு அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் புதிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும்போது அலுவலர் ஒருவர் இணைக்கப்படுவாரென அறிவிக்கப்பட்டது. (V) சட்ட அலுவலர் பதவிக்கு நேர்முகப் பரீட்சையொன்று நடத்தப்பட்டு அலுவலர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டதுடன், தேசிய

	வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இல. 04/2022 இற்கிணங்க ஆட்சேர்ப்புச் செய்ய இயலவில்லை. எனினும், அரச சேவையின் அத்தியாவசிய வெற்றிடங்களைப் பூர்த்தி செய்தல் பற்றிய CP/DCE/23 ஆம் இலக்க, 2023.02.08 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் சட்ட அலுவலரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. **மூன்றாம் நிலை** i. 21 பிரதான மதுவரிப் பரிசோதகர் பதவிகள் பொருட்டு அலுவலர்களைப் பதவி உயர்த்துதல் தொடர்பாக, 2023.02.24, 25 ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது. ii. அரச சேவையின் அத்தியாவசிய வெற்றிடங்களைப் பூர்த்தி செய்தல் பற்றிய CP/DCE/23 ஆம் இலக்க, 2023.02.08 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 49 மதுவரிப் பரிசோதகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது **இரண்டாம் நிலை** (I) வெற்றிடம் நிலவுகின்ற 36 மதுவரி சார்ஜன் பதவிகளை நிரப்புவதற்காக நிதி அமைச்சின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதற்கிணங்க, மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் பொருட்டு பரீட்சைகள் திணைக்களத்தால் 2023 யூலையில் பரீட்சையை நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (II) வெற்றிடம் நிலவுகின்ற 111 மதுவரிக் காவலர் பதவி பொருட்டு ஆட்சேர்ப்பு செய்வதற்காக அரச சேவையின் அத்தியாவசிய வெற்றிடங்களைப் பூர்த்தி செய்தல் பற்றிய CP/DCE/23 ஆம் இலக்க, 2023.02.08 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. உரிய திறந்த போட்டிப் பரீட்சை 2023 யூலை இல் பரீட்சைகள் திணைக்களத்தால் நடத்தப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (III) தற்போது வெற்றிடமாக உள்ள 16 அரச முகாமைத்துவ சேவை அலுவலர் பதவிகள் மற்றும் 01 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு விரைவாக அலுவலர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு நிதி அமைச்சின் செயலாளர் ஊடாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது..

	ஆரம்ப நிலை 15 மதுவரிக் காவலர் சாரதி பதவிகளில் வெற்றிடங்கள் நிலவுவதுடன் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரச சேவையின் அத்தியாவசிய வெற்றிடங்களைப் பூர்த்தி செய்தல் பற்றிய CP/DCE/23 ஆம் இலக்க, 2023.02.08 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.
<u>கணனித் தரவு முறைமையின் தற்போதய நிலைமை</u> மதுவரித் திணைக்களம், இலங்கை சுங்கத் திணைக்களம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆகியவற்றை இணைக்கும் கணனித் தரவு முறைமையின் தற்போதய நிலைமை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் காலாண்டு ரீதியாகத் தரவுகள் பரிமாறிக் கொள்ளப்படும் என்றும், இலங்கை சுங்கத்தின் ஊடாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தகவல்களப் பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கண.அலு. தெரிவித்திருந்தார். **<u>பரிந்துரை</u>** கணனி தரவு அமைப்பைத் தயாரிப்பது தொடர்பாக பொதுக் கணக்குகள் பற்றிய குழுவிடம் முன்வைக்கப்பட்ட காலச் சட்டகத்தின்படி, 2023 ஜனவரியில் அதன் செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கும், இதற்காக மொரட்டுவைப் பல்கலைக்கழகம் அல்லது கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்பைப் பெற நடவடிக்கை எடுக்குமாறும் பொதுக் கணக்குகள் பற்றிய குழு பரிந்துரைத்தது	தயாரிக்க உத்தேசித்துள்ள மதுவரித் திணைக்களத்தின் வருமான நிர்வகிப்பு முறையில் (Revenue Administration System of Excise Department – RASED) முன்னேற்றங்கள் பின்வருமாறு. 1. மென்பொருள் தேவைப்பாட்டு குறிப்பீடுகள் (Software Requirements Specifications – SRS) அறிக்கையின் வரைவு தயாரிக்கப்பட்டது. 2. இந்த SRS அறிக்கையை திணைக்கள அலுவலர்களின் ஊடாக சரிபார்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் (Signed off) அதற்குச் சமாந்தரமாக மென்பொருள் மேம்பாடு பொருட்டு சேவை வழங்குனர் ஒருவரை வழங்குவதற்காக பெறுகை நடவடிக்கையை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 3. இங்கு திணைக்களத்தின் தேவைப்பாடுகள் இயன்ற வரையில் இனங்காணப்பட வேண்டியுள்ளதால் அதன் பொருட்டு போதிய கால அவகாசம் தேவை என்பதால் அவ்வாறு செய்வதன் மூலம் நிலையான முறைமையின் மாற்றத் தேவைப்பாடுகளை(Change Requests) குறைக்க இயலும்.
<u>பாதுகாப்பு ஸ்டிக்கர் முகாமைத்துவ முறைமை.</u> மதுபானப் போத்தல்கள் மற்றும் மதுபானப் போத்தல் தொடர்பான உற்பத்திகளுக்கான பாதுகாப்பு ஸ்டிக்கர் முகாமைத்துவ முறைமை மதுவரித் திணைக்களத்தினால் தற்போது நடைமுறைப்படுத்தப்படுவது குறித்து, குழு தனது கவனத்தை செலுத்தியது. ஸ்டிக்கரின் நம்பகத்தன்மையை பொதுமக்கள் இனங்காணும் வகையில் பயன்படுத்தத் தக்க பிரயோக முறையை (APP) தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டு விரைவில் பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுவதாகவும் பிர.கண.அலு./ கண.அலு. அறிவித்தார். மேலும், இந்த ஸ்டிக்கர் முகாமை முறையை செயற்படுத்தலை ஆரம்பித்தலுடன், உற்பத்தி மற்றும் மதுவரி வருமான அதிகரிப்பைக் காண முடியும் என்றும் அவர் மேலும் விளக்கியிருந்தார்.	நுகர்வோரிற்கு மதுபானங்களின் செம்மையை சரிபார்ப்பதற்காக செல்லிட தொலைபேசி மென்பொருள் 2022.08.27 ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அது Android செயற்பாட்டு முறைக்கு Google Play Store இனூடாக தரவிறக்கம் செய்ய இயலும் என்பதுடன் IOS செயற்பாட்டு முறைக்கு Appstore இனூடாக தரவிறக்கம் செய்யலாம். மேற்படி மென்பொருளின் ஊடாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள சகல இறக்குமதி செய்யப்பட்ட மதுபானங்கள் மற்றும் உள்நாட்டு மதுபானங்களின் செம்மை மற்றும் அவை பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

மதுபான ஏற்றுமதி மீதான மதுவரி விலக்களிப்பு

2021 ஆம் ஆண்டு மதுபானம் ஏற்றுமதி செய்யப்பட்டதன் மூலம் பெறப்பட்ட வரியில் இருந்து 3,689,638,848 ரூபா மதுவரித் தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதை குழு அவதானித்துள்ளது. மேலும், மதுவரி விலக்களிப்பு குறித்த தகவல்கள் கணக்கீட்டுப் பிரிவில் பராமரிக்கப்படாததால், முழுமொத்த வருமானம் குறித்த விவரங்கள் ஏதும் இல்லை என்றும், நிகர வரி வருமானம் மட்டுமே கணக்கிடப்பட்டதும் இங்கு வெளிப்படுத்தப்பட்டது. அவ்வுற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதை உறுதிப்படுத்த மேலே உள்ள ஒருங்கிணைந்த கணினிமயமாக்கப்பட்ட தரவு அமைப்பின் முக்கியத்துவத்தை குழு மேலும் வலியுறுத்தியது.

தற்போது இலங்கை சுங்கத் திணைக்களத்துடன் (Link) தொடர்பு கொண்டு உரிய தரவுகளைப் பெற்று வருவதாகவும், கணக்கீட்டு பதிவேடுகளில் உள்ள பிழைகள் மற்றும் குறைகளைத் திருத்திக் கொள்ள அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாகவும் கண.அலு. அறிவித்தார்.

எவ்வாறாயினும், நாட்டில் நிலவும் டொலர் நெருக்கடிக்கு தீர்வாக, இலங்கையின் மதுபான ஏற்றுமதியை மேலும் ஊக்குவிப்பதற்கான முக்கியத்துவம் குறித்து குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

இறக்குமதி செய்யப்பட்ட மதுபானங்களுக்கான ஆவணச் சரிபார்ப்பு மற்றும் வெளிநாட்டு மதுபானங்கள் மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களின் இரசாயன ஆய்வுகூட சோதனைகளை மேற்கொள்வது குறித்து குழு கேட்டறிந்தது. இலங்கைக்கு மதுபானம் இறக்குமதி செய்யும் போது, அதற்கான இறக்குமதி ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு, வர்த்தகப் பெயர் அங்கீகாரம்(Brand Approval) பெற்ற பின்னரே உள்ளூர் சந்தையில் மதுபானங்களை விற்பனை செய்ய அனுமதி வழங்கப்படும் எனவும் பிர.கண.அலு./ கண.அலு. வெளிப்படுத்தியிருந்தார்.

மேலும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வெளிநாட்டு மதுபானம் பாரம்பரிய முறைகள் இல்லாமல் தயாரிக்கப்பட்டால், அது (Emulated Foreign Liquor) என்ற பிரிவின் கீழ் சந்தையில் வெளியிடப்படும் எனவும் அதன்படி, உள்நாட்டு உற்பத்தியாளர் பாரம்பரிய முறைப்படி வெளிநாட்டு மதுபானங்களை தயாரிக்க முனைவதாகவும் பிர.கண.அலு./ கண.அலு. வெளிப்படுத்தியிருந்தார்.

ஏற்றுமதி செய்யப்படும் மதுபானங்களின் மீதான வரி விலக்களிப்பிற்கு அமைய கணக்குப் பதிவு முறை தயாரிக்கப்பட்டு வருகிறது. இதற்காக பொதுத் திறைசேரியின் இணக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதோடு, 2023 இல் கணக்காய்வில் சுட்டிக்காட்டியவாறு கணக்கீட்டுப் பிரிவில் பதிவேடுகளைப் பேண இயலுமென நான் நம்புகிறேன்.

வெளிநாட்டு மதுபானங்கள் மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களை இரசாயன ஆய்வுகூடப் பரிசோதனை செய்யும் பொருட்டு, இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு முழுமையான இரசாயன ஆய்வுகூடம் ஒன்றை நிர்மாணிக்கும் பொருட்டு 2023 இன் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது ஆய்வுகூடம் தாபித்தல் தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1) தற்போது கட்டடம் இனங்காணப்பட்டுள்ளது.
2) அங்கு பகுதி பிரித்தல்(partition) பொருட்டு பெறுகை முடிவடைந்துள்ளது.
3) இரசாயன ஆய்வுகூடத்திற்கான ஆலோசனை பொருட்டு முதல் சுற்றுக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.
4) T.O.R. (Team of Reference) தயாரித்தல் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
5) அதற்கிணங்க வேலைத்திட்டம் சம்பந்தமான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

<u>நுகர்வுக்கு அல்லாத அற்ககோல் இறக்குமதியின் போது இடம்பெறுகின்ற முறைகேடுகள்</u> குடிபானமல்லாத மதுபானம் இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் போது கிலோகிராமில் கணக்கிடப்பட்டாலும், இலங்கையில் அளவின் அடிப்படையில் லிட்டரில் கணக்கிடப்படுகிறது. இருப்பினும், சுற்றுச்சூழலின் வெப்பநிலைக்கு ஏற்ப அளவு மாறுகிறது மற்றும் வெளிநாட்டில் உள்ள குளிர் காலநிலையின் அளவை ஒப்பிடும்போது இந்த நாட்டில் அளவு அதிகரிக்கிறது என்பதுடன் இறக்குமதியாளர் இந்த கூடுதல் அளவு மூலம் மோசடியாக லாபம் பெறலாம் எனவும் சுட்டிக்காட்டிய குழு, அது தொடர்பில் கவனஞ் செலுத்துமாறு பிர.கண.அலு. இற்கு அறிவுறுத்தியது.	07/2018 ஆம் இலக்க குடிபானமல்லாத மதுசாரத்தின் மதுவரி பொருட்டான மதுவரி அறிவித்தலின் 3(1) ஆம் பிரிவிற்கிணங்க, மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், நபர் ஒருவருக்கு ஒரு குறித்த நோக்கத்திற்காக வெளியிடப்பட்ட உரிமத்தின் அதிகாரத்தின் கீழ் தவிர, அங்கு (1) ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட குடிபானமல்லாத மதுசார வகை ஒன்றை எவரேனும் நபர் ஒருவரால் இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், உற்பத்தி செய்தல், உடைமையில் வைத்திருத்தல், களஞ்சியப்படுத்தல், விற்றல், போக்குவரத்துச் செய்தல், விற்பனைக்காக சமர்ப்பித்தல் அல்லது காட்சிப்படுத்தல் ஆகாதென குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இந்த அறிவித்தலின் 5 ஆம் பிரிவின் கீழ் இந்த அறிவித்தலின் பிரிவுகள், நிபந்தனைகளைப் போல இவ்வறிவித்தலின் கீழ் வெளியிடப்பட்ட உரிமங்கள், அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறுமிடத்து, அதன் பொருட்டு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 48 அல்லது 56 ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2.8 இன் முதலாம் பந்தியில் குறிப்பிட்ட சகல நிறுவனங்களுக்கும் குடிபானமல்லாத மதுசாரத்தை இறக்குமதி செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் மொத்தமாக விற்பனை செய்தல் பொருட்டு மதுவரி உரிமங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அந்த நிறுவனங்களால் மதுவரி அறிவித்தல் 07/2018 இலும் உரிமத்திலும் குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறி குடிபானமல்லாத மதுசாரத்தை இறக்குமதி செய்தல் தொடர்பில் தொழில்நுடபக் குற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான கூட்டுத் தண்டப்பணம் அறவிடப்பட்டதன் மேல் அக்கொள்கலன்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
<u>இரத்தினபுரி கள்ளுத் தவறணையின் கேள்வி மனு</u> இரத்தினபுரி இல 01 தவறணைக்கு தீர்மானிக்கப்பட்ட கேள்வித் தொகையை விடவும் குறைந்த தொகைக்கு கேள்வி மனு கோரப்படாமல் கேள்வியை வழங்கியுள்ளமை. மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பேரில் ரூ. 28,000,000/- இற்கு அந்தத் தவறணை வழங்கப்பட்டதாக பிர.கண. அலு./ கண.அலு. வெளிப்படுத்தியிருந்தார். மேலும், அந்த தொகைக்கு கேள்வியை வழங்காவிடின், அந்த பகுதியில் சட்டவிரோத மது விற்பனை அதிகரிக்கும், என்றும் அரசுக்கு ரூ. 28,000,000/- வருமானம் கூட இழக்கப்படும்	மேற்படி கள்ளுத் தவறணையை மதுவரி ஆணையாளர் நாயகத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூ. 46,084,120.00 இற்குப் பெற்றுக் கொள்வதற்கு கேள்வியைச் சமர்ப்பிக்காமை காரணமாக மீளவும் கேள்வி மனு கோரப்பட்ட போதிலும் அச்சந்தர்ப்பத்திலும் மதுவரி ஆணையாளர் நாயகத்தின் மதிப்பீட்டுப் பெறுமதிக்கு எந்தவொரு கேள்வியாளரும் கேள்வி மனுவைச் சமர்ப்பித்திருக்கவில்லை. அது பற்றி பிரதேச செயலாளரினால் மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமாக அறிவித்தமையின் பிரகாரம், கேள்வி பொருட்டு அதியுயர் விலையைச் சமர்ப்பித்த திரு.எல்.ஏ.அமரரத்ன மற்றும் திரு.கே.ஏ.பி.சோமாரத்ன ஆகியோருக்கு இக்கள்ளுத் தவறணையை ரூ. 32,000,000.00 இற்கு வழங்குவதற்கான அனுமதியை பிரதேச

என்றும் அவர் மேலும் விளக்கியிருந்தார்.	செயலாளரிடம் மதுவரி ஆணையாளர் நாயகம் எழுத்து மூலமாக அறிவித்திருந்தார். எனினும், அத்தொகைக்கு கள்ளுத் தவறணையைப் பெற்றுக் கொள்ள உரிய நபர்கள் விருப்பமின்மையை வெளிப்படுத்தி மதுவரி ஆணையாளர் நாயகத்திடம் மேன்முறையீடு ஒன்றைச் சமர்ப்பித்திருந்தனர். அது தொடர்பில் மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் ஊடாக கேள்வியாளர்களின் மேன்முறையீட்டில் குறிப்பிட்ட விடயங்கள் மற்றும் அரச வருமானம் தொடர்பில் கவனத்திற் கொண்டு அக்கேள்வியை ரூ. 28,000,000.00 இற்கு வழங்க தீர்மானித்து மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் பிரதேச செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது. அதன்படி, ரத்தினபுரி 01 ஆம் இலக்க கள்ளுத் தவறணையை எல்.ஏ.அமரரத்தன மற்றும் கே.ஏ.பி.சோமரத்ன ஆகியோருக்கு பிரதேச செயலாளரினால் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டு உரிமம் வழங்கப்பட்டது. அதில் பிரதானமாக பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. அதாவது, கள்ளுத் தவறணைக்கு நிலவும் போட்டித்தன்மையை காலத்திற்குக் காலம் வித்தியாசமான வெட்டுமுகத்தைக் கொண்டிருத்தல், 2020 இற்காக அதிகபட்ச விலைமனுவைச் சமர்ப்பித்த ஒரே தரப்பினராகவிருத்தல், அதற்காக வேறு போட்டியாளர் சமர்ப்பிக்காமை ஆகிய விடயங்களையும் கள்ளுத் தவறணையை 2020 இல் விற்காமையால் அரச வருமானத்தை இழக்கக்கூடிய தன்மை, கள்ளுத் தவறணையை விற்காமையால் சட்ட விரோத மதுபான உற்பத்தி மற்றும் விற்பனை அதிகரிக்கக் கூடிய தன்மை ஆகிய சகல விடயங்களையும் கருத்திற் கொண்டு திணைக்களத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி மற்றும் விலைமனுதாரரின் கேள்வித்தொகை ஆகிய இரண்டினதும் இடையப் பெறுமதியான ரூ. 28,000,000.00 விலைக்கு இக்கேள்வியை வழங்குதல் பொருத்தமானதென பரிந்துரைக்கப்பட்டதென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வாறே, 2021, 2022 களில் மீள கேள்வி மனுக் கோரும் போது விற்கப்படாத சகல கள்ளுத் தவறணைகளையும் வெளிநாட்டு மதுபான சாலைகளையும் நிதி அமைச்சரின் அனுமதியைப் பெற்று மதுவரி ஆணையாளர் நாயகத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியிலிருந்து பொதுச் சதவீதப் பெறுமதியைக் கழித்து கள்ளுத் தவறணையை விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனவே இப்பிரச்சனை தற்போது தீர்க்கப்பட்டுள்ளது.

<u>பீடி உற்பத்திக்கான வரி அறவீடு பரிந்துரை</u> பீடி உற்பத்திக்காக அரசுக்கு சில வரிகளை செலுத்த சில பீடி உற்பத்தியாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாக குழுவில் தெரிவிக்கப்பட்டது. அதன்படி அரசிற்கு வரிப்பணத்தை அறவிடக்கூடிய வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதில் கவனம் செலுத்துமாறு குழு உத்தரவிட்டது.	பீடி உற்பத்திக்கு 2023 ஜனவரி 01 ஆம் திகதி முதல் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் சகல பீடி பொருட்டும் ரூ.2.00 வீதம் புகையிலை வரி ஒன்றை அறவிடுவதற்காக, அரசினால் 2022.12.31 ஆம் திகதிய 1999 இன் 08 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டது.
<u>மதுவரி வருமானங்களை கணக்கிடும் செயற்பாட்டை சீராக்குவதற்கான கணினி மென்பொருள் முறைமை</u> மதுவரி வருமானத்தைக் கணக்கிடுவதற்கான செயன்முறையை சீராக்குவதற்கு கணினி மென்பொருள் முறைமையொன்றை செயற்படுத்துவதற்கு திணைக்களத்திற்கு 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை வரவு செலவுத் திட்ட மற்றும் குறைநிரப்பு நிதி ஒதுக்கீடுகள் மூலம் 87.2 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்ட போதிலும், மேற்படி கருத்திட்டம் செயற்படுத்தப் படாமை உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம் மற்றும் மதுவரித் திணைக்களத்தை இணைக்கும் கணினி தரவு முறைமை செயல்படுத்தப் படுவதோடு இந்த வேலைத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் பிர.கண. அலு./ கண. அலு. வெளிப்படுத்தியிருந்தார்.	திணைக்களத்தால் தயாரிக்க உத்தேசித்துள்ள மதுவரித் திணைக்களத்தின் வருமான நிர்வகிப்பு முறையில் (Revenue Administration System of Excise Department – RASED) பின்வரும் முன்னேற்றங்கள் அடையப் பெற்றுள்ளன. 1. மென்பொருள் தேவைப்பாட்டு குறிப்பீடுகள் (Software Requirements Specifications – SRS) அறிக்கையின் வரைவு தயாரிக்கப்பட்டது. 2. இந்த SRS அறிக்கையை திணைக்கள அலுவலர்களின் ஊடாக சரிபார்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் (Signed off) அதற்குச் சமாந்தரமாக மென்பொருள் மேம்பாடு பொருட்டு சேவை வழங்குனர் ஒருவரை வழங்குவதற்காக பெறுகை நடவடிக்கையை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 3. இங்கு திணைக்களத்தின் தேவைப்பாடுகள் இயன்ற வரையில் இனங்காணப்பட வேண்டியுள்ளதால் அதன் பொருட்டு போதிய கால அவகாசம் தேவை என்பதால் அவ்வாறு செய்வதன் மூலம் நிலையான முறைமையின் மாற்றத் தேவைப்பாடுகளை(Change Requests) குறைக்க இயலும்.
மதுபான உற்பத்தி நிறுவனங்களினால் சந்தை ஏகபோக உரிமை ஏற்படுத்தப்படுவதைத் தடுத்தல் சில மதுபான உற்பத்தி நிறுவனங்கள் சந்தை ஏகபோக உரிமையினை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதைத் தடுப்பதற்கு திணைக்களம் தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள். மதுவரித் திணைக்களம் இது தொடர்பில் விசேட ஆய்வொன்றை மேற்கொண்டு, நிதியமைச்சிடம் யோசனை ஒன்றை வழங்கியதுடன், இந்நிலையை தடுக்க தேவையான சுற்றறிக்கைகளையும் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் பிர.கண. அலு/ கண. அலு. தெரிவித்திருந்தார் .	சகல சில்லறை விற்பனை உரிம நிலையங்களிலும் சகல உற்பத்தியாளர்களினதும் மதுபானங்களை வைத்திருக்க வேண்டுமென மதுவரி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை ஒன்றின் ஊடாக அறிவிக்கப்பட்டது.

மதுபானங்களின் செறிவைக் கண்டறியும் உபகரணத் தொகுதிகள் மற்றும் அளவுச்சாடிகள் கொள்வனவு செய்யப்படாமை பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை மதுபானங்களின் செறிவைக் கண்டறியும் உபகரணத் தொகுதிகள் 814 உம் அளவுச்சாடிகள் 138 உம் கொள்வனவு செய்யப்படாமை. நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையில் இந்த உபகரணங்களை வாங்குவதில் சிரமம் உள்ளதாக பி.க.அ./க.அ. அறிவித்தார். இருப்பினும், முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் பரிந்துரைக்கப்பட்ட தரத்தின்படி பழுதுபார்க்கப்படுவதாகவும் தற்போது ஒவ்வொரு உற்பத்திச்சாலையிலும் செறிவைக் கணித்தல் மற்றும் தரங் கணித்தல் மேற்கொள்ளப்படுவதாக பி.க.அ./ க.அ. மேலும் தெரிவித்தார்.	இலங்கை மதுவரித் திணைக்களத்தின் சகல பிராந்திய அலுவலகங்கள், தலைமை அலுவலகம் மற்றும் மதுவரித் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் வடிசாலைகள், குதங்கள், மதுபான உற்பத்திச்சாலைகளிற்குத் தேவையான செறிவை அளவிடும் உபகரணங்களின் தேவை இனங்காணப்பட்டிருந்தது. இதற்காக புதிதாக கொள்வனவு செய்வதற்காக பெறுகை நடவடிக்கைகள் 2020 பெப்ரவரியில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அப்போது நிலவிய கோவிட் 19 தொற்றுநோய் மற்றும் நிதி நெருக்கடிகள் காரணமாக அப்பெறுகை நடவடிக்கைகள் தாமதமடைந்தன. உள்நாட்டில் இந்த உபகரணங்களை கொள்வனவு செய்ய இயலாதிருந்ததுடன் அவற்றை இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. அப்போது சந்தையில் காணப்பட்ட வேறுபாடான உபகரணம், மதுவரித் திணைக்களத்தின் தேவைக்கு பொருத்தமற்றதென அது தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்று அறிக்கையிட்டிருந்தது. மதுவரித் திணைக்களத்தின் அலுவலர் குழாம் ஒன்று அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தின் பயிற்சியொன்றைப் பெற்று திணைக்களத்தின் உபகரணங்களை மீளப் பாவிக்கக்கூடிய வகையில் தரப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம், மதுவரித் திணைக்களத்தின் தேவைப்பாடு முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளது.
இரத்தினபுரி 01 ஆம் மற்றும் 02ஆம் இலக்க கள்ளுத் தவறணைளின் கள்ளு மாதிரிகளைப் பரிசோதிக்காமை மாகாண உதவி மதுவரி ஆணையாளர் மற்றும் மதுவரி அத்தியட்சகர்கள் சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள கள்ளுப் போத்தல்களின் மாதிரிகளை மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையேனும் அரசாங்கத்தின் இரசாயனப் பகுப்பாய்வாளரின் பரிசோதிப்புக்கு உட்படுத்த வேண்டியிருப்பினும் இரத்தினபுரி 01ஆம் மற்றும் 02ஆம் இலக்க கள்ளுத் தவறணைகளில் 2017 அக்டோபர் மாதத்திலிருந்து 2020ஆம் ஆண்டு வரையும் அத்தகைய பரிசோதிப்புகளை நடத்தியிருக்காமை. இந்த கள்ளுத் தவறணைகள் தொடர்பாக சில குறைபாடுகள் இருப்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு தற்போது மதுவரி ஆணையாளர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையின்படி மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கள்ளு மாதிரிகள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதாக பி.க.அ./ க.அ. தெரிவித்தார். இருப்பினும், இரசாயனப் பகுப்பாய்வாளரின் அறிக்கையைப் பெறுவதற்கு முன்பே கள்	கள்ளில் நிலவுகின்ற தர ஒழுங்குபடுத்தல் குறைபாட்டை இலங்கை மதுவரித் திணைக்களம் தெளிவாக இனங்கண்டுள்ளதுடன் ஒட்டு மொத்தத் தேவையின்படி மேற்கொள்ளப்பட வேண்டிய கள்ளு வழங்கலுக்குத் தேவையான தென்னை மரங்களின் எண்ணிக்கை, சீவுவோரின் எண்ணிக்கை என்பன பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் கள்ளின் தரம் கணித்தல் பற்றிய ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த ஆராய்ச்சிக்கான முதல் கட்டம் நிறைவடைந்துள்ளது. அந்த ஆராய்ச்சியின் இரண்டாம் கட்டம் இலங்கைத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் முதலாவது ஆய்வுகள் மற்றும் பரிசோதனைகள் நிறைடைந்துள்ளது. இலங்கை மதுவரித் திணைக்கள இரசாயன ஆய்வுகூடத்தின் அமைவிடம் தொடர்பான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விற்கப்படுவதால், சிலவேளைகளில், தரமற்ற கள் நுகர்வோரின் கைகளில் சேரக்கூடும் என்று விளக்கமளித்த குழு, கள்ளின் தரத்தை ஒழுங்குபடுத்துவதில் குறைபாடுகள் இருப்பதாக சுட்டிக்காட்டியது. இந்த நிலைமையை ஏற்றுக்கொண்ட பி.க.அ./க.அ., மத்திய மதுவரி இரசாயன ஆய்வுகூடம் ஒன்றை நிர்மாணிப்பதன் மூலம் இந்நிலையை தடுக்க முடியும் என்றும், அதற்காக இரசாயன ஆய்வுகூடத்தை விரைவில் நிர்மாணிக்க வேண்டியதன் அவசியத்தின் முக்கியத்துவம் குறித்தும் வலியுறுத்தினார்..	
<u>நுகர்வுக்கு அல்லாத மதுசார இறக்குமதிக்காக தற்காலிக உரிமமொன்றை வழங்கியிருத்தல்</u>. பண்ட ஏற்றுமதி மற்றும் போக்குவரத்திற்காக மதுவரி திணைக்களத்தில் உரிமம் பெறாத ஒரு தனியார் கம்பனி, ரூபாய் 5,168,570/- பெறுமதி கொண்ட நுகர்வுக்கு அல்லாத மதுசார இறக்குமதிக்காக தற்காலிக உரிமமொன்றை வழங்கியிருத்தல் குறித்து குழு விசாரித்தது. இந்த மதுசாரத்தை சுங்கத்திலிருந்து விடுவிக்க தற்காலிக உரிமம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், அதற்காக ரூ.500,000/- தண்டப்பணமும், அதற்கான வரிகளும் அறவிடப்பட்டுள்ளதாகவும் பி.க.அ./க.அ. அறிவித்தார்.	மதுவரி அறிவித்தல் 07/2018 இனதும் உரிமத்திலும் குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறி குடிபானமல்லாத மதுசாரத்தை இறக்குமதி செய்தல் தொடர்பில் தொழில்நுட்பக் குற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான கூட்டுத் தண்டப் பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது..

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்கான விசேட செயற்குழு கூட்டம்

2022 ஜூன் 15

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
<u>வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறை(RAMIS)</u>	இடைவெட்டு முகத்தின் ஊடாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் கோரப்படும் மதுவரித் திணைக்களத்தின் தரவுகளை தொடரறா(இணைய) முறையில் அனுப்பி வைக்கப்படுகிறது. தற்போது மதுவரித் திணைக்களம் இலங்கை சுங்கத்தின் ASYCUDA முறைமையின் ஊடாக இறக்குமதி ஏற்றுமதித் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான அனுமதியை online ஊடாக வழங்குதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மதுவரித் திணைக்களத்தின் யோசனைகள் எதனோல் மற்றும் எரிபொருள் பற்றாக்குறையால் வருமான இழப்பு, எதனோல் பற்றாக்குறையினால் அரசாங்கத்திற்கு நாளொன்றுக்கு 50-100 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாக மதுவரித் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலர் வெளிப்படுத்தியதுடன் அதற்கு பின்வரும் யோசனைகள் பிரேரிக்கப்பட்டன - வெல்லப்பாகு மற்றும் சோளத்தை இறக்குமதி செய்ய 2 அரச நிறுவனங்களிற்கு அனுமதி வழங்குதல். - தாங்கல் இருப்பை பேணும் பொருட்டு எதனோல் இறக்குமதிக்கு அனுமதி வழங்குதல் - 15,000-20,000 தொன் சோளத்தை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கல் - சோளம் மற்றும் கரும்பு பயிர்களுக்கு போதுமான உரங்களை வழங்குதல் - மதுபான போத்தல்கள் உற்பத்திக்கான மூலப்பொருட்களை வழங்குதல்.	2022 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் தொடங்கிய எதனோல் தட்டுப்பாடு தற்போது பெருமளவில் குறைந்துவிட்டது. இதன்படி, 2022 ஆம் ஆண்டில் எதனோல் தட்டுப்பாடு தற்போது நல்ல நிலையை எட்டியுள்ளமை அவதானிக்கப்பட்டது. ❖ வெல்லப்பாகு இறக்குமதி தற்போது தேவையற்றதாகத் தோன்றுகிறது. ❖ மக்காச்சோள உற்பத்திக்கு இருந்த தடைகள் ஓரளவுக்கு நீங்கியதாகத் தெரிகிறது. ❖ உர வழங்கல் ஓரளவு மேம்பட்டுள்ளது. ❖ மதுபான போத்தல்கள் உற்பத்திக்கான மூலப்பொருட்களின் இறக்குமதி அல்லது சேகரித்தல் தொடர்பான பிரச்சினைகள் விவாதிக்கப்படுகின்றன.. எவ்வாறாயினும், தற்போது எதனோல் உற்பத்திச்சாலைகளில் நல்ல நிலை காணப்படுகிறதென அறிக்கையிடுகின்றேன்.
மதுபானசாலைகளை இணைப்பதில் முன்னேற்றம் இந்த செயல்முறை உரிய நேரத்தில் பூர்த்தி செய்யப்படும் என்றும், தேவைப்பாடுகளை சேகரித்து, இடர்பாடுகளைக் கண்டறிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மதுவரித் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலர் அறிவித்தார்.	RASED வேலைத்திட்டத்தின் ஊடாக சகல மதுபான விற்பனை நிலையங்களின் நாளாந்த விற்பனையில் முன்னேற்றம் பெறப்படவுள்ளது. இந்த வேலைத்திட்டம் ஆரம்ப நிலையில் உள்ளது..
கள்ளு உரிமம் பொருட்டு வழங்கப்பட்ட வரிச் சலுகையால் இழக்கப்பட்டுள்ள வருமானம் கள் உரிமங்களிற்கு வழங்கப்பட்ட வரிச் சலுகையால் நாள் ஒன்றிற்கு மதுவரித் திணைக்களத்திற்கு ரூ. 400 மில்லியன் வருமான இழப்பு ஏற்படுதல். 93% வருமானத்தை 6 நிறுவனங்களும், 7% வருமானத்தை 15 நிறுவனங்களும் ஈட்டுவது தெரியவந்தது. மேலும், 2022 ஜனவரி 03 ஆம் திகதி முதல், மதுபான போத்தல்களுக்கு ஸ்டிக்கர்களை அறிமுகப்படுத்தி மோசடிகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலர் அறிவித்தார். மேலும் மொபைல் அப்ஸ் ஊடாக சில வரிகள் செலுத்துபவர் வரியைச் செலுத்தியுள்ளாரா என்பதை பொதுமக்கள் அறிந்து கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். ஸ்டிக்கர் திட்டத்தை செயல்படுத்தும் இந்திய	2021.01.07 ஆம் திகதிய 3/2021 மதுவரி அறிவித்தலின் பிரகாரம் ஒரு லீற்றர் கள் இருப்பின் பொருட்டு ரூ.25 ஆக இருந்த மதுவரி, 2022 .04. 29 ஆம் திகதிய ம.அறிவித்தல் 03/2022 இன் கீழ் ரூ.50 வரை உயர்த்தப்பட்டுள்ளது. 2021 உடன் ஒப்பிடுகையில் 2022 இல் கள் உற்பத்தி மற்றும் வருமானம் உயர்வடைந்தமை அறிக்கையிடப்பட்டுள்ளது. கள்ளுப் போத்தல் உற்பத்தியின் போது ஏனைய மதுபான உற்பத்தியைப் போன்றே இவ்வுற்பத்தியிலும் பாதுகாப்பு ஸ்ரிக்கர் ஒட்டுதல் நடைபெறும்.

நிறுவனத்தில் சில தொழில்நுட்ப பிரச்சனையால் மொபைல் அப்ளிகேஷன் திட்டம் முடிவடைவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், இவ்வேலைத்திட்ட அறிமுகத்திற்கு பின் கள் உரிம வருமானம் மும்மடங்கு அதிகரித்ததால் வருமானம் 17% அதிகரித்துள்ளது என்றும் குழுவின் கேள்விக்கு பதிலளித்து மதுவரித் திணைக்களத்தின் க.அ. வெளிப்படுத்தியிருந்தார். 2022 யூலை 01 முதல் இறக்குமதி செய்யப்பட்ட மதுபான உரிமச் செயன்முறையை இந்த செல்லிட அப்ளிகேசன் ஊடாக பரிசீலிப்பதற்கு வசதியளிக்கப்படுவதாக மதுவரித் திணைக்களத்தின் க.அ. குழுவின் விசாரணைக்கு பதிலளிப்பதன் மூலம் வெளிப்படுத்தினார். **<u>பரிந்துரை</u>** - ஸ்டிக்கர் வேலைத் திட்டத்திற்கு பொறுப்பான இந்திய நிறுவனத்திற்கு பணம் செலுத்துவதை நிறுத்தி, உடன்படிக்கையின் படி தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்	
<u>கள்ளிற்கான தரங்களை நியமித்தல்</u> இலங்கைத் தரநிர்ணய நிறுவனம், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து கள்ளிற்கான தரத்தை நியமிக்கும் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்படுவதாக குழுவின் கேள்விக்கு பதிலாக மதுவரித் திணைக்களத்தின் க.அ. தெரிவித்திருந்தார்.	இலங்கைத் தரநிர்ணய நிறுவனம், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து கள்ளிற்கான தரத்தை நியமிக்கும் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
<u>செயற்கைக் கள்ளைத் தடை செய்தல்</u> செயற்கைக் கள்ளைத் தடை செய்ய முறையான வேலைத்திட்டம் ஒன்று தேவை என்றும் மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் கள்ளின் நுகர்வை அதன் மூலம் நிறுத்த முடியும் என்றும் மதுவரித் திணைக்களத்தின் க.அ. தெரிவித்தார். ஒவ்வொரு மதுபான வகை பொருட்டும் தரநிலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். **<u>பரிந்துரை</u>** - உற்பத்தியின் தரம் மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்காது என்பதை உறுதி செய்தல் - செயற்கைக் கள்ளின் உற்பத்தியைத் தடுக்கவும் இயற்கை கள்ளை ஊக்குவிக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.	மேலே 20 இன் பிரகாரம், கள்ளுக்கான தரநிலைகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், கள்ளுக்கான தரநிலைகளை நிர்ணயிப்பதன் ஊடாக, செயற்கை கள்ளு பற்றிய கண்டுபிடிப்புகளை விரிவுபடுத்துவதன் மூலம் இந்த சிக்கலை தீர்க்க இயலும்.

இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் அனுமதிப்பத்திரத்தை வழங்கும் செயல்முறையை முறைமைப்படுத்துவதற்காக கணினி மென்பொருள் தொகுதியொன்றை அறிமுகப்படுத்தும் ஆற்றல் குறித்து கலந்துரையாடுவதற்காக கூட்டப்பட்ட விசேட செயற்குழு கூட்டம்

2022 ஜூன் 16

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடுகள் திணைக்களத்தின் கணனி அமைப்பு உரிமங்களை வழங்குதலின் வினைத்திறனை மேம்படுத்தல் மற்றும் இலங்கை சுங்கம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம், தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் மதுவரித் திணைக்களம் உட்பட 5 அடிப்படை முக்கியமான நிறுவனங்களுடன் திணைக்களத்தின் கணினி முறைத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக திணைக்களத்தின் கணினி அமைப்பின் செயல்திறனை மேம்படுத்துதல். இந்தக் கணினி முறையைத் தயாரிப்பதற்கு இலங்கையின் தகவல், தொடர்பாடல், தொழில்நுட்ப முகவரகம்(ICTA) உடன் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் உடன்படிக்கை செய்து வெளிநிறுவனம் ஒன்றின் ஊடாக(outsource) அம்முறை தயாரிக்கப்பட்டதாகவும், அம்முறையை பயன்படுத்துவதில் பாரிய தவறு ஏற்பட்டதாகவும், அது பயனாளிகளுக்கு உகந்ததாக(user friendly) இல்லாததால் அம்முறை கைவிடப்பட்டதாகவும் க.அ. அறிவித்தார். மேலும், இந்த முறை தமது திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட பிரச்சினைகள்/சிரமங்கள் குறித்து இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகத்திற்கு அறிவிக்கப்பட்ட போதிலும், தேவையான மேம்படுத்தல் மேற்கொள்ளப் படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். மேலும், தற்போது இஸ்தோனிய அரசிடம் இருந்து தகவல் முறையை நிறுவுவதற்கு மானியம் பெறப்பட உள்ளதாகவும், அதற்கான பரிந்துரைகள் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடம் இருந்து கோரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். <u>பரிந்துரை</u> - பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செயல்பாட்டில் மோசடி, ஊழல் மற்றும் முறைகேடுகளைத் தடுக்க தொடர்புடைய	மதுவரித் திணைக்களம் இதுவரை இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டு திணைக்களத்தின் கணினி அமைப்புடன் இணைக்கப்படவில்லை. மதுவரித் திணைக்களத்தின் உத்தேச வருமான நிர்வாக முறைமை (RASED) மூலம் இந்த வசதிகள் திட்டமிடப்பட வேண்டும் என இனங்காணப்பட்டுள்ளது.

நிறுவனங்களுக்கு இடையே ஒருங்கிணைந்த தகவல் அமைப்பை கட்டாயமாக செயல்படுத்துதல். - இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம், இந்த அமைப்பின் மூலம் ஒருங்கிணைக்க எதிர்பார்க்கப்படும் நிறுவனங்கள் மற்றும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகம் என்பவற்றை 2022 யூன் 16 ஆம் திகதி குழுவிற்கு அழைத்தல் - அன்றைய தினம் இந்த முறையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள்/பலவீனங்களைக் கண்டறிந்து, அம்முறையை மேம்படுத்த எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல்.	
<u>மதுவரித் திணைக்களத்தின் மென்பொருள் முறைமை</u> மதுபான விற்பனை நிலையங்கள், பொலிஸ் நிலையங்கள், பிரதேச செயலகங்கள் போன்ற சகல தரப்பினரும் பங்கேற்கும் வகையில் இந்த முறை தயாரிக்கப்படும் என்றும், உரிமம் வழங்கும் செயல்முறை, உற்பத்திச்சாலை மேற்பார்வை, மதுவரி மற்றும் வரி நிர்வாகம், மதுபான விநியோகம், வழங்கல், தொடர் ஒழுங்கமைப்பு, குற்றம் மற்றும் சட்ட முகாமை, அறிக்கைகளை வெளியிடும் வசதி மற்றும் இடர் முகாமை போன்ற அனைத்து பகுதிகளையும் இதன் ஊடாக உள்ளடக்கப்படும் என்றும் மதுவரித் திணைக்களத்தின் க.அ. தெரிவித்தார். <u>பரிந்துரை</u> தற்போது, மதுவரி உரிம அனுமதியானது இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திடம் வன் பிரதியொன்றாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்றும், அவ்வனுமதியை இணைய வழியில் சமர்ப்பித்தல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.	திணைக்களத்தில் புதிய கணினி முறைமை நிறுவப்பட்ட பின்னர், இந்த அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் கணினி அமைப்பின் தற்போதைய அபிவிருத்தி தொடர்பில் விடை 05 ஏற்புடையதாகும்.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 182 இற்காக இலங்கை மதுவரித் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
மதுவரி ஆணையாளர் நாயகம்
இலங்கை மதுவரித் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 182

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்

2022 ஜூன் 08

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
<u>இறக்குமதிக்காக அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்</u> விதந்துரைக்கப்பட்ட காலத்தைக் கடந்த வாகனங்கள்,பாகங்களாகப் பிரிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் மற்றும் மதுபான உற்பத்திக்கான மதுசாரம் (வெறிய வடிநீர்மம்) முதலியவற்றிற்கு அனுமதிப் பத்திரம் வழங்கும் கொள்கைகள் <u>பரிந்துரை</u> - 2018 - 2020 வரையான காலத்திற்குள் திணைக்கத்தினால் மதுசாரம/ஸ்பிரிட் (வெறிய வடிநீர்மம்) இறக்குமதிக்காக அனுமதிப் பத்திரம் வழங்கும் முறை,அனுமதிப் பத்திரம் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள குழுவினர், அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள கம்பனிகள்,ஒரு மாதத்திற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற அளவு தொடர்பான விரிவான அறிக்கை ஒன்றினை பிரதம கணக்கு வழங்கும் உத்தியோகத்தர் /கணக்கீட்டு உத்தியோகத்தர் மூலம் கணக்குகள் குழுவிற்கு முன்வைத்தல். - மதுசாரம/ஸ்பிரிட் (வெறிய வடிநீர்மம்) அனுமதிப் பத்திரம் வழங்கும் செயற்பாடுகளில் தவறாகப் பயன்படுத்தப்படுவதனைதட தடுப்பதற்கான உரிய கொள்கை ஒன்றினை பிரதம கணக்கு வழங்கும் உத்தியோகத்தர் /கணக்கீட்டு உத்தியோகத்தர் மூலம் ஒழுங்குபடுத்தல். - மருந்து உற்பத்திக்காக கொண்டு வரப்பட்ட மதுசாரம் (வெறிய வடிநீர்மம்) அச்செயற்பாட்டிற்காகவே எடுக்கப்படுகின்றதா என்பன போன்ற தொடர்பாக உரிய பின் விபரம் மேற்பார்வை பிரதம கணக்கு வழங்கும் உத்தியோகத்தர் /கணக்கீட்டு உத்தியோகத்தர் மூலம் அறிமுகப்படுத்தல். - வாகனங்கள் மற்றும் பகுதிகள் மற்றும்	ஸ்பிரிட் (வெறிய வடிநீர்மம்) இறக்குமதிக்காக அனுமதிப் பத்திரம் வழங்கும் கொள்கை,2018-2020 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குள் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள குழுவினர், அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள கம்பனிகள்,ஒரு மாதத்திற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற அளவு தொடர்பான விரிவான அறிக்கை ஒன்றினை நிதி, பொருளாதார உறுதிப்பாட்டு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் MFO6/4/COPA/Export.Dept மற்றும் 2022.09.05 திகதிய கடிதத்தின் மூலம் கணக்குகள் குழுவிற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. வாகனங்கள் மற்றும் பகுதிகள் மற்றும் ஸ்பிரிட் இறக்குமதிக்காக அனுமதிப் பத்திரங்களை கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் மூலம் அனுமதிக்கப்பட்ட கொள்கை மற்றும் மதுசாரம்/ஸ்பிரிட் (வெறிய வடிநீர்மம்) அனுமதிப் பத்திரம் வழங்கும் செயற்பாடு மற்றும் கொள்கைகளை உள்ளடக்கிய அறிக்கை ஒன்றினை நிதி, பொருளாதார உறுதிப்பாட்டு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் MFO6/4/COPA/Export.Dept மற்றும் கடிதத்தின் மூலம் 2022.09.07 ஆம் திகதி கணக்குகள் குழுவிற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

ஸ்பிரிட் இறக்குமதிக்காக அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது உரிய ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கை ஒன்றினை பிரதம கணக்கு வழங்கும் உத்தியோகத்தர் /கணக்கீட்டு உத்தியோகத்தர் மூலம் நான்கு (04) மாத காலத்திற்குள் ஒழுங்குபடுத்தி கணக்குகள் குழுவிற்கு அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பித்தல் மற்றும் ஸ்பிரிட் இறக்குமதிக்காக அனுமதிப் பத்திரம் வழங்கும் கொள்கை முறையினை ஒழுங்குபடுத்தும் போது மதுவரித் திணைக்களத்துடன் ஒருங்கமைத்து அவ்வலுவலை மேற்கொள்ளல்	
இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கணினி முறைமை அனுமதிப் பத்திரங்கள் வழங்குதலின் செயற்றிறனை மேம்படுத்தல் மற்றும் இலங்கைச் சுங்கம்,மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்,தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் மதுவரித் திணைக்களம் உட்பட முக்கியமதான 05 நிறுவனங்களுடன் திணைக்களத்தின் கணினி முறைமையை இணைப்பதன் மூலம் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு திணைக்களத்தின் கணினி முறையின் செயல்திறனை மேம்படுத்தல். **பரிந்துரை** - பொருட்கள் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிச் செயற்பாடுகளில் நிகழ்கின்ற ஊழல்,மோசடிகள் மற்றும் அசம்பாவிதங்கள் என்பவற்றைத் தடுப்பதற்காக உரிய நிறுவனங்களுக்கிடையில் ஒருமித்த தகவல்கள் கட்டமைப்பு ஒன்றினை அத்தியவசியமாகச் செயற்படுத்தல். - இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,இக்கட்டமைப்பின் மூலம் இணைப்பதற்காக எதிர்பார்க்கின்ற நிறுவனங்கள் மற்றும் இலங்கைத் தகவல்கள் மற்றும் தொலைத் தொடர்பு தொழிநுட்பப் பிரதிநிதி நிறுவனங்கள் 2022ஆம் ஆண்டு யூன் மாதம் 16ஆம் திகதி கணக்குகள் குழு முன்னிலைக்கு அழைப்பதற்காக,	அமெரிக்க ஐக்கிய ஒன்றிய தூதரகம் அரசாங்கத்தின் மூலம் அலுவலகத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட EXBS நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் அன்பளிப்பாக கிடைக்கவிருந்த தகவல்கள் முறைமை திணைக்களத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கு உரிய இலங்கை தகவல்கள் தொழிநுட்ப முகவர் நிறுவனத்தின் (ICTA) சிபாரிசினைப் பெற்றுக் கொடுப்பதற்காக அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.அதில், வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் மூலம் ICTA நிறுவனத்தின் சிபாரிசின் பிரகாரம் மற்றும் அதனை அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்துவற்காக அனுமதி கிடைக்கப் பெற்றது.அக்கட்டமைப்பினைப் பெற்றுக் கொள்வதற்காக மற்றும் ஏனைய நிறுவனங்களை இணைத்துக் கொள்வதற்காக உரிய அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்று உள்ளது. அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுவின் கட்டளைகளின் பிரகாரம் தகவல்கள் தொழிநுட்ப முகவர் நிறுவனம் (ICTA) 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆம் திகதி அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுவிற்காக அழைக்கப்பட்டதோடு,அதில் கிடைக்கப் பெற்ற கட்டளைகளின் பிரகாரம் இத்திணைக்களத்திற்காக நடைமுறைப்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த கணினிக் கட்டமைப்பிற்கு உரிதான விரிவான அறிக்கை ஒன்றினைத் தயாரிதது நிதி, பொருளாதார உறுதிப்பாட்டு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் மூலம் 2022.10.26 ஆம் திகதி அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுவிற்கு முன்வைப்பதற்காக அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- அன்றைய தினம் முறைமையில் தோன்றியுள்ள பிரச்சினைகள் /குறைபாடுகளை இனங்கண்டு அக்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படக் கூடிய நடவடிக்கைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடுவதற்காக	
<u>பரிசில் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் பின்னர் பல்வேறு தரப்பினருக்குக் மாற்றப்படுதல்</u> பரிசில் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் பின்னர் பல்வேறு தரப்பினருக்குக் மாற்றப்படுதலின் கீழ் 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 589 ஆகும்,இவற்றில், (அ) முதலாவது பதிவு தொடக்கம் வாகனத்தினை மற்றொரு நபரின் பெயரில் வாகனம் பதிவு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் 159, (ஆ) முதலாவது பதிவுக்குப் பின்னர் ஐந்து (05)வருட காலம் கடப்பதற்கு முன்னர் வாகனங்கள் பிரிதொருவருக்க விற்பனை செய்தல் அல்லது மாற்றப்பட்ட சந்தர்ப்பங்கள் 34, (இ)2012.09.30 ஆம் திகதியில் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களில் இதுவரை பதிவு செய்யப்படாத வாகனங்கள் 115, (ஈ)வாகனத்தின் பதிவு உரிமையை வைத்திருக்கும் அனுமதிப்பத்திரதாரரின் பெயரில் வாகனங்களை மாற்றுவதற்கான நிபந்தனை நீக்கப்பட்ட 27 வாகனங்கள் இருந்தன.சரியான நிபந்தனைகளுடன் கூடிய அனுமதிப் பத்திரதாரரின் பெயரில் சரியாகப் பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 254 காணப்பட்டது.. **<u>பரிசில் திட்டத்தின் கீழ் வாகனங்கள்இறக்குமதி செய்வதில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு இடையில் இணைப்பாக்கம் இன்மை.</u>** பரிசில் திட்டத்தின் கீழ் வாகனங்கள் இறக்குமதிக் செய்வதற்காக அனுமதிப் பத்திரத்தினை வழங்குகின்ற இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,அவ்வாகனத்தின் இறக்குமதியினை மேற்கொள்கின்ற சுங்கவரித் திணைக்களம் மற்றும் அவ்வாகனத்தினைப் பதிவு செய்கின்ற மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களங்களுக்கு இடையில் போதிய ஒருங்கமைப்புக் காணப்பட வேண்டியிருப்பினும்,அவ்வாறான போதிய ஒருங்கமைப்பு ஒன்று காணப்படாமை. <u>பரிந்துரை</u>	பரிசில் திட்டத்தின கீழ் வழங்கப்படுகின்ற இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரத்தில் கீழ்க் காணப்படும் நிபந்தனைகள் உள்ளடக்கப்படும். • வாகனம், அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட பெயரில் பதிவு செய்யப்படல் வேண்டும். • இவ்வாகனம் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நாள் தொடக்கம் ஐந்து (05)வருட காலம் கடக்கும் வரை விற்பனை செய்தல்,வேறு தரப்பினர்களுக்கு கையளித்தல் அல்லது வேறு விதத்தில் அகற்றல் போன்றவற்றினைச் செய்யக் கூடாது. • வாகனத்தை வலது பக்கமாகச் செலுத்துதல் வேண்டும். • அனுமதிப் பத்திர பற்று வைக்கின்ற சந்தர்ப்பத்தில் உரிய அனைத்து மேலதிகக் கட்டண அனுமதிப் பத்திரதாரர் மூலம் செலுத்தப்படல் வேண்டும். • வாகனத்தை மண் /சேறுகளின்றி காணப்பட வேண்டியதுடன் அதனை உறுதிப்படுத்துவதங்காக சான்றிதழ் ஒன்றினை முன்வைக்கப்படல் வேண்டும். • குளிருட்டப்பட்ட வாகனமாயின் CFC வாயுவுடன் கூடிய பாவணைக்காக அனுமதி வழங்கப்பட மாட்டாது. • அனுமதிப் பத்திர பற்று வைக்கின்ற சந்தர்ப்பத்தில் யப்பானிய வாகன மதிப்பீட்டு நிறுவனமான/ Bureau Veritas இனால் வழங்கப்படுகின்ற ஏற்றுமதிச் சோதனைச் சான்றிதழை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இவ்வாறான மோட்டார் வாகனம் ஒன்றினைப் பதிவு செய்தல் சான்றிதழின் உரிய நிபந்தனைகளைக் குறிப்பிடப்படப்பட வேண்டியதுடன் அவ்வாறான நிபந்தனைகளைக் குறிப்பிட்டு பதிவுச் சான்றிதழ் வழங்கப்படும்.இதன் பிரகாரம் அன்பளிப்பு முறையின் கீழ் கொண்டு வரப்படுகின்ற வாகனம் ஒன்றின் பதிவுச் சான்றிதழ் உரிய நிபந்தனைகளின் கீழுள்ளதால் 05 வருட காலத்திற்கு முன்னர் மீண்டும் வேறொரு தரப்பினரின் பெயரில் பதிவு செய்வதற்கான சாத்தியப்பாடுகள் இல்லை. ஆரம்பப் பதிவு தொடக்கம் 05 வருட காலத்தினைத் தாண்டியதன் பின்னர் வேறொரு தரப்பினருக்கு உரிய வாகனத்தினை கையளிக்கும் போது சுங்க வரி அறவிடப்படுவதன் கீழ் வாகனத்தினைக் கையளித்தல் தொடர்பாக இத்திணைக்களத்தின் எதிர்ப்பு இல்லை என்பதனை மோட்டார் வாகனப்

- இவ்வாறு பரிசில் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்களுக்காக அனுமதிப் பத்திரங்களைப் விநியோகித்ததன் பின்னர் அச்செயற்பாட்டினை பின் விபரம்/ஒழுங்குபடுத்தலுக்கான ஒரு வேலைத் திட்டத்தினை பிரதம கணக்கு வழங்கும் உத்தியோகத்தர் /கணக்கீட்டு உத்தியோகத்தர் மூலம் ஒழுங்குபடுத்துமாறும், - அவ்வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டதன் பின்னர் ஏதேனும் அசமபாவிதங்கள் நிகழ்ந்திருப்பின் உரிய வரியின் அளவினை அறவிட்டுக் கொள்வதற்கு அல்லது வேறு ஏதேனும் ஓர் பொருத்தமான நடவடிக்கையினை ஒருங்கமைப்பின் மூலம் வேலைத் திட்டத்தினை பிரதம கணக்கு வழங்கும் உத்தியோகத்தர் /கணக்கீட்டு உத்தியோகத்தர் மூலம் ஒரு மாத காலத்திற்குள் ஒழுங்குபடுத்தி கணக்குகள் குழுவிற்கு அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பிக்குமாறும்,	போக்குவரத்துஆணையாளர் நாயகத்திற்கு தெரிவித்து அனுப்பப்படும்.அதன் பிரகாரம் உரிய சுங்க வரிக் கொடுப்பனவினை உறுதிப்படுத்திக் கொண்டதன் பிற்பாடு மோட்டார் வாகனப் போக்குவரத்துஆணையாளர் நாயகத்தின் மூலம் உரிய வாகனம் வேறொரு தரப்பினருக்கு கையளித்தல் இடம்பெறும். தற்போது காணப்படுகின்ற தொழிநுட்ப வசதிகளுக்குள் இதுவரையில் ASYCUDA இனூடாக இலங்கை சுங்கத்துடன் நிகழ்நிரல் முறையினூடாக தொடர்பாயுள்ளது.அது போலவே இலங்கைச் சுங்கம் மோட்டார் வாகனத் திணைக்களத்துடன் நிகழ்நிரல் முறையினூடாக தொடர்புபட்டுள்ளதால் இரட்டைச் சோதனை நடைபெறுகின்றது.மேலும் இத்திணைக்களத்தில் நிறுவுவதற்காக எதிர்பார்த்டதுள்ள நவீன ந - அனுமதிப் பத்திர முறையினூடாக இவ் இறக்குமதி ஒருவருக்கொருவர் தொடர்புபடுத்தப்படும்.
<u>தரநியமங்களுக்கு முரணாக வாகனங்களை இறக்குமதி செய்யும் இறக்குமதியாளர்களை வர்த்தமானியில் பிரசுரிக்காமை.</u> 1978 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட1969ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 11ஊ இன் படி,தர நியமங்களுக்கு முரணாக இறக்குமதி செய்யும் இறக்குமதியாளர்களை வர்தத்மானியில் பிரசுரிக்காமை. **<u>பரிந்துரை</u>** - தரநியமங்களுக்கு முரணான வகையில் வாகனங்களின் இறக்குமதியினை மேற்கொள்கின்ற இறக்குமதியாளர்களை வர்தத்மாதனிப் பத்திரிகை அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டமை போதுமானதாக இன்மையால் அதற்குப் பதிலாக அவ் இறக்குமதியாளர்களின் பதிவினை இரத்துச் செய்வதற்கு பிரதம கணக்கு வழங்கும் உத்தியோகத்தர் /கணக்கீட்டு உத்தியோகத்தர் மூலம் செயற்படல். - தரநியமங்களுக்கு முரணாக இறக்குமதியினை மேற்கொள்கின்ற இறக்குமதியாளர்களின் பதிவினை இரத்துச் செய்வதற்கு அவசியமான சட்ட ரீதியான ஏற்பாடுகளை அங்கீகரிப்பதற்காக பிரதம கணக்கு வழங்கும் உத்தியோகத்தர் /கணக்கீட்டு உத்தியோகத்தர் மூலம் 3 மாத காலரத்திற்குள் கணக்குகள் குழுவிற்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்தல்.	1978 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க (திருத்தப்பட்ட)இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 11ஊ பிரிவின் பிரகாரம் இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கட்டளைகளுக்கு குறிப்பாக உரித்தாக்கப்பட்டுள்ள தரநியமங்களுக்கு முரணான விதத்தில் அக்குழுவினர் இறக்குமதியாளரால் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படாவிடின் அவ் இறக்குமதியாளர் அல்லது இறக்குமதியாளர்கள் வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலின் பேரில் பிரசுரிக்கப்பட முடியும். மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் ஆலோசணையின் பிரகாரம் இதுவரையில் கரைநிரற் பட்டியலுடன் கூடிய வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் வரைவு செய்யப்பட்டுள்ளதோடு,அதற்கு அவசியமான அனுமதியினை பெற்றுக் கொள்வதற்கு அவசியமான வேலைத் திட்டங்களை இதுவரையில் நிறைவேற்றிக் கொண்டு செல்லப்படுகின்றது. அதுபோலவே 2022.12.19 ஆம் திகதி நீதிபதித் திணைக்களத்தின் அரச தரப்பு சட்டத்தரணி,திலங்க பீரிஸ் அவர்களுடனான கலந்துரையாடலின் பிரகாரம் மற்றும் நீதிபதித் திணைக்களத்தின் மூலம் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள 2003.01.03 ஆம் திகதிய ம ஏ/207/2022 ஆம் இலக்கம் கொண்ட கடிதத்தின் பிரகாரம்,1969ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கம் கொண்ட)இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் மூலமான அதிகாரம் கிடைக்கப் பெற்ற போதிலும் அவ்வாறான இறக்குமதியாளர்களின் வியாபார கம்பனிகளின் பதிவினை இரத்துச் செய்வதற்காக)இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு சட்ட

	அதிகாரம் வழங்கப்படவில்லை என்பதனை எமக்கு அறியப்படுத்தி உள்ளனர். தரநியமங்களுக்கு முரணான இறக்குமதியினை மேற்கொள்கின்ற இறக்குமதியாளர்களின் பெயர்களை கரைநிரற் பட்டியலில் அல்லது கறுப்பு நிரப் பட்டியலில் உள்ளடக்கி பிரகடனப்படுத்துவதற்கு உரிய வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் தொடர்பாக மேலதிக விடயங்களை அறிவதற்கான வட்ட வரைவு திணைக்களத்துடன் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்துக் கொள்கின்றேன்.
<u>33 மோட்டார் கார்களை தவறான சுங்க சுங்க இணைப்பு வகைப்படுத்தலின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டதன் காரணமாக ரூ.114.6 மில்லியன் சுங்க வரி இழப்பு ஏற்பட்டமை.</u> 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் 21 ஆம் திகதிய 1933/13ஆம் இலக்கமுடைய வர்த்தமானியின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும்,அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சரினால் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டாளருக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு மாறாகவும் 2017 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட 33 மோட்டார் கார்கள் தவறான தவறான சுங்க இணைப்பு வகைப்படுத்தல் இலக்கங்களின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டமையால் ரூ.114.6 மில்லியன் சுங்க வரி இழப்பு ஏற்பட்டமை. இதன் கீழ் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் 30% வரி அறவிடப்படும் சுங்க இணைப்பு வகைப்படுத்தல் இலக்கங்களின் கீழ் ஆயணனய சுழ 8 ரக வகையான வாகனங்கள் 33 வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.இருப்பினும் அவ்வாகனங்களின் என்ஜினின் (விசைப்பொறி) வித்தியாசங்களின் அடிப்படையில் 15% வரி அறவிடப்பட வேண்டிய சுங்க இணைப்பு வகைப்படத்தல் இலக்கங்களின் கீழ் சுங்கத்தினால் வாகனங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன.இவ்வனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் ஆயணனய சுழ 8 வாகனமொன்றுக்கு, ரூ..35 இலட்சம் வரி செலுத்த வேண்டும்.இவ்வாறு, என்ஜின் வகை வெளிப்படுத்தப்பட்ட வாகனங்கள் இன்றி வேறு என்ஜின்களைக் கொண்ட வாகனங்களை இறக்குமதி செய்துள்ளமையால், சுங்கத்தினால் ஒரு வாகனத்திற்கு ரூ.35 இலட்சத்திற்குப் பதிலாக ரூ.1.5 இலட்சம் மட்டுமே வசூலிக்கப்பட்டுள்ளமை. <u>பரிந்துரை</u>	சுங்கத் திணைக்களத்துடன் இணைந்து ASYCUDA செயற்பாட்டு முறையின் ஊடாக திணைக்களம் விநியோகிக்கப்பட்ட அனைத்து அனுமதிப் பத்திரங்களிற்கும் உரிய பொருட்களை விடுவித்துக் கொள்வதற்கான அனுமதியினை இத்திணைக்களத்தின் மூலம் வழங்கப்படுகின்றமையால் அனைத்து இறக்குமதி அனுமதிப் பத்திரங்களுக்கும் உரிய இறக்குமதி ஒன்று நிகழ்ந்த போது உரிய பற்று வைத்தல் கட்டாயமாக நடைபெற வேண்டும்.அதனூடாக வழங்கப்பட்ட அனைத்து பற்று வைத்தல் செயற்பாடுகளுக்கும் உட்படுவதாக மேற்பார்வை செய்யப்பட்டு உள்ளது.அதன் பிரகாரம், அனுமதிப் பத்திரத்தின் பேரில் கொண்டு வரப்பட்ட வாகனம்,அவ்வாகனமா என மேற்பார்வைக்காக உட்படுத்தப்படும் எனது இலக்கம் IECD /02/07/2021 மற்றும் 2022.06.10 திகதிய கடிதத்தின் மூலம் உரிய விசாரணையின் தற்போதைய முன்னேற்றத்தினை விசாரணை செய்ததோடு,எனது இலக்கம் IECD/02/07/2021 மற்றும் 2022.08.15 திகதிய நினைவூட்டல் கடிதத்தின் மூலம் விசாரணைகள் துரிதப்படுத்தி முடித்துத் தருமாறு பணிப்பாளர்,குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு மேலும் தெரிவித்துக் கொள்ளப்பட்டு உள்ளது.

- இலங்கைச் சுங்கம் தனக்கு முன்னால் தோன்றுகின்ற வாகனங்களுக்கு வரியினை அறவிடல் நிகழ்வதாக மேற்பார்வை செய்யப்பட்ட கணக்குகள் செயற்குழு,இறக்குமதி அனுமதிப் பத்திரத்தின் பிரகாரம் உரிய வாகனத்தினைக் கொண்டு வரப்பட்டிருக்கின்றதா என்பதனை இறக்குமதிகள் மற்றும் ஏற்றமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் மூலம் சோதனைக்காக உட்படுத்தப்படல். - இது தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முறைப்பாட்டினை முன்வைத்து ஒரு வருட காலத்திற்கும் அதிகமான காலம் சென்றுள்ளதால் அரச கணக்குகள் செயற்குழுவின் மூலம் விசாரிக்கப்பட்டதாகத் தெரிவித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மூலம் இது தொடர்பாக காணப்படுகின்ற விசாரணையின் முன்னேற்றத்தினை விசாரித்து அவிசாரணையின் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்ட உடனே பிரதம கணக்கு வழங்கும் உத்தியோகத்தர் /கணக்கீட்டு உத்தியோகத்தர் மூலம் கணக்குகள் குழுவிற்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்தல்.	
<u>காலாவதியான மருந்துகளை இறக்குமதி செய்தல்</u> மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள பதிவுச் சான்றிதழின் செல்லுபடியாகும் காலப்பகுதியைக் கடந்த ரூ.964,897 பெறுமதியான காலாவதியான மருந்துகளை இறக்குமதி செய்தல். **<u>ஆயுட்காலம் 75% இற்குக் குறைந்த மருந்துகளை கட்டணம் அறவிட்டு விடுவித்தல்</u>** மருந்துகளை இறக்குமதி செய்யும் போது 75% ஆயுட் காலம் எஞ்சியிருக்க வேண்டிய நிலையில் ஆயட்காலம் 75% இற்குக் குறைவான மருந்துகளை கட்டணம் அறவிட்டு விடுவித்தல். **<u>பரிந்துரை</u>** - 2018-2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் 75% இற்குக் குறைந்த ஆயட்காலத்தினைக் கொண்ட ஔடதங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள தொகைக்கான தகவல்களுடன் கூடிய அறிக்கை ஒன்று (போதுமானதாக மற்றும் சதவீதமாக)ஒரு மாத காலத்திற்குள் க் கட்டணம் ஒன்றினை பிரதம கணக்கு வழங்கும் உத்தியோகத்தர் /கணக்கீட்டு உத்தியோகத்தர் மூலம் கணக்குகள் குழுவிற்கு சமர்ப்பித்தல்.	2021 ஆம் ஆண்டுக்கு உரிய எஞ்சியுள்ள ஆயட் காலம் 75% இற்குக் குறைந்த இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளின் விபரங்களுடன் கூடிய அறிக்கை நிதி, பொருளாதார உறுதிப்பாட்டு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் MFO6/4/COPA/Export.Dept மற்றும் 2022.09.05 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளதோடு,2020 ஆம் ஆண்டிற்கு உரிய அறிக்கையும் இதனுடன் ஒழுங்குபடுத்தப்பட்டு உள்ளது. 2018,2019 ஆம் ஆண்டுகளுக்கு உரிய அறிக்கையினை ஒழுங்குபடுத்திக் கொண்டிருப்பதோடு,அவ்வறிக்கையினை ஒழுங்குபடுத்தும் போது அன்றாட கடமை அலுவல்களின் வேலைப்பழு மற்றும் பழைய ஆவணங்களை தேடிக் கொள்வதில் கஷ்டங்கள் போன்ற சிரமங்கள் காணப்படுவதனால் அவ்வறிக்கைகளை அவசரமாக சமர்ப்பிப்பதற்கு செயற்படுவதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அனுமதிப் பத்திரம் பெறாமல் திண்மக்கழிவுகள் அடங்கிய கொள்கலன்களை இறக்குமதி செய்தல். 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலகக இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் சட்டத்தின் 04 ஆவது பிரிவின் (3)ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்படி சட்டத்தின் 26ஆவது பிரிவின் கீழ் அமைச்சரினால் மேற்கொள்ளப்படும் கட்டளைகள் தொடர்பாக, 2017 நவம்பர் மாதம் 09 ஆம் திகதிய 2044/40 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திடம் அனுமதிப் பத்திரம் பெற வேண்டும்.ஆயினும் இலங்கை முதலீட்டுச் சபையில் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனத்தினால் 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த விலை,காப்புறுதி மற்றும் வண்டிக் கூலி(வி.கா.வ) ரூபா.19,760,224 பெறுமதியான 2,131,325 திண்மக் கழிவுகளைக் கொண்ட 102 கொள்கலன்கள் தொடர்பில் அவ்வாறு அனுமதிப் பத்திரம் பெறாமல் செயற்பட்டிருத்தல். மேலும்,இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டவை படுக்கை,மெத்தை போன்ற மருத்துவமனைக் கழிவுகள் (hospital waste) என்பதும் தெரியவந்தது. **பரிந்துரை** இறக்குமதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய பொருட்கள் சட்ட விரோதமான முறையில் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுவதனைத் தடுப்பதற்கு உரிய வேலைத் திட்டம் ஒன்றினை கீழ் ஒழுங்குபடுத்தல்.	இது சம்பந்தமாக நிதி, பொருளாதார உறுதிப்பாட்டு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் மூலம் ஆலோசனையினைப் பெற்றுக் கொள்வதற்கான அலுவல்கள் செய்யப்பட்டுள்ளதோடு,தேவையான ஆலோசனைகள் பெற்றுக் கொண்டதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.
அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் ஒரு தொகுதி உரத்தினை இறக்குமதி செய்துள்ளமை மற்றும் மேலதிகக் கட்டணம் அறவிடப்படாமல் குறித்த தொகுதி உரத்தினை விடுவித்தல். அரசு அல்லது தனியார் உர நிறுவனங்கள் உரத்தை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப் பத்திரம் பெற வேண்டுமென்பதோடு,அத்தகைய அனுமதிப் பத்திரம் பெறாமல் இறக்குமதி செய்திருப்பின் இறக்குமதி செய்யப்பட்டிருப்பின் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களம் மேலதிகக் கட்டணமாக 5% ஐ வசூலித்து குறிப்பிட்ட பொருட்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்க வேண்டும். இவ்வாறு அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்	கணக்குகள் தொடர்பான செயற்குழுவின் கட்டளைகளின் பிரகாரம் ஒழுங்குபடுத்தப்பட்ட 2022.06.20ஆம் திகதிய கடிதம் உரக் கம்பனிகளுக்கு அனுப்பி வைப்பதற்காக அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன.

கொள்ளாமல் 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான உரக் கம்பனி ஒன்று ஒரு தொகுதி உரத்தினை இறக்குமதி செய்துள்ளமை,இறக்குமதி செய்யப்பட்ட உரத்திற்கு சுங்கம் 5% மேலதிகக் கட்டணத்தை அறவிடாமல் குறிப்பிட்ட உரத்தினை விடுவித்துள்ளமை மற்றும் இவ்வாறு அனுமதிப் பத்திரம் இன்றி உரம் இறக்குமதி செய்யப்பட்டமையால் மேலதிகக் கட்டணமாக அறவிடப்பட வேண்டிய ரூ. 86,907,433 வருமானத்தை அரசு இழந்துள்ளமை. **பரிந்துரை** - எவ்வாறாயினும்,இவ்வாறான நிகழ்வுகள் எதிர்வரும் காலங்களில் நடைபெறாமல் இருக்க வேண்டும் என சுட்டிக் காட்டிய கணக்குகள் குழு,இவ்விடயம் அரச அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுவில் கணக்காய்வு விசாரணைக்கு உட்பட்டதோடு,இவ்வாறான நிகழ்வுகள் எதிர்வரும் காலங்களில் முன்மாதிரியாகக் கூடாதெனவும்,இவ்வாறான செயற்பாடுகள் எதிர்வரும் காலங்களில் நடத்தப்படாமல் இருக்குமாறும் பிரதம கணக்கு வழங்கும் உத்தியோகத்தர் /கணக்கீட்டு உத்தியோகத்தர் மூலம் உரக் கம்பனிக்கு தெரிவித்து அனுப்பப்பட்டது.	
<u>உரிமப்பத்திரங்களின் மீது அறவிடப்படும் மேலதிகக் கட்டணங்களின் அடிப்படையில் வரிச் சட்டத்துக்கு அமைய வரி அறவிப்படாமை மற்றும் வரி விலக்களிக்கப்பட்ட பொருட்களாக இனங்காணப்பட்ட பொருட்களுக்கு VAT அறவிடப்படாமை.</u> இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்துக்கு அமைய திணைக்களத்தினால் வழங்கப்படும் உரிமப்பத்திரங்கள் மீது மீளாய்வு ஆண்டுக்காக அறவிடப்படுகின்ற மேலதகக் கட்டணமான ரூபா.547,980,916 இற்காக 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அறவிடப்படாமை காரணமாக 43,838,47 ரூபாவை அரசாங்கம் இழந்துள்ளது. Sri Lanka Customs national imports tariff guide அடிப்படையாகக் கொண்டு இலங்கை சுங்கத்தின் மூலம் வரி விலக்களிக்கப்பட்ட பொருட்களாக இனங்காணப்பட்ட பொருட்களுக்கான உரிமப்பத்திர வருமானத்தின் மீது பெறுமதி சேர் வரி(VAT) அறவிடப்படாமை காரணமாகவும் அரசாங்கத்துக்குக் கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டுள்ளமை. **பரிந்துரை** அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ்	அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் மேலதிகக் கட்டணம் ஒன்று சேர்க்கப்பட்ட பெறுமதியின் பேரில் வரி விலக்கு அளிக்கப்பட்டமை என்பதனைக் குறிப்பிட்டு தேசிய வருமானத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட கடிதத்தின் பிரதி ஒன்று 2022.09.07 ஆம் திகதி கணக்கீட்டுக் குழுவிற்கும் கணக்காய்வாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளது.

அறவிடப்படுகின்ற அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் மேலதிகக் கட்டணம் ஒன்று சேர்க்கப்பட்ட பெறுமதியின் பேரில் வரி விலக்கு அளிக்கப்பட்டமை என்பதனைக் குறிப்பிட்டு தேசிய வருமானத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட கடிதத்தின் பிரதி ஒன்று பிரதம கணக்கு வழங்கும் உத்தியோகத்தர் /கணக்கீட்டு உத்தியோகத்தர் மூலம் 2 வார காலத்திற்குள் கணக்கீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிப்படல் வேண்டும்.	

இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் அனுமதிப்பத்திரத்தை வழங்கும் செயல்முறையை முறைமைப்படுத்துவதற்காக கணினி மென்பொருள் தொகுதியொன்றை அறிமுகப்படுத்தும் ஆற்றல் குறித்து கலந்துரையாடுவதற்காக கூட்டப்பட்ட விசேட செயற்குழு கூட்டம் 2022 ஜூன் 16

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
<u>இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திகணக்களத்தின் தமன்தபாருள் முகறகம</u> 2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு முதலாம் கட்டத்தின் பின்னர் இகடநடுசவ நிறுத்தப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திகணக்களத்தின் தமன்தபாருள் முகறகம. • இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திகணக்களம் தமன்தபாருள் முகறகமதயான்றிகன நிறுவுவதற்காக 2015ஆம் ஆண்டளவில் சைள்வி பத்திர நகடமுகறதயான்கற ஆரம்பித்திருந்த சபாதும் அந்த நகடமுகறகய நிறுத்தி சவதறாரு தமன்தபாருள் முகறகமதயான்றிகன உருவாக்குவதற்காக இலங்கை தைவல், ததாடர்பாடல் ததாழில்நுட்ப முகவராண்கமயின் ஊடாக (ICTA) சைள்விப் பத்திரங்ககளக் சைாரி, ஒப்பந்த சசகவ அமர்த்தல் (outsource) நிறுவனதமான்றுக்கு சைள்விப் பத்திரத்கத வழங்கியகம. • இதன் முதற் கட்டம் நிகறவு தசய்யப்பட்ட சபாதும் முதலாவது கட்டத்கத நகடமுகறபடுத்தும் சபாது ஏற்பட்ட சில சிக்கல்கள் காரணமாக இரண்டாவது கட்டத்கத ஆரம்பிக்க முடியாமற் தசன்றகம. • முதலாவது கட்டத்தின் பணிகளை நிகறவு தசய்வதற்காக ரூ. 8.1 மில்லியன் தசலவிடப்பட்டகம.	2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட மென்பொருள் அமைப்பு பற்றிய விரிவான அறிக்கை முதல் கட்டத்திற்குப் பிறகு பாதியிலேயே நிறுத்தப்பட்டது MFO6/4/COPA/Export.Dept மற்றும் 19.10.2022 தேதியிட்ட கடிதம் மூலம் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

• முதலாவது கட்டத்தின் சபாது 60 இறக்குமதியாளர்களில் 12 சபகர மாத்திரசம பதிவு தசய்துள்ளதனால் அதன் முன்சனற்றம் 20% ஆை மாத்திரசம காணப்படுகின்றகம. விதப்புகரைள். கருத்திட்டத்தின் நிதித் சதாற்றுவாய், நிதியின் அளவு, இகடநடுசவ நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள், நிலவிய பலவீனங்கள், திகணக்களத்தினால் இத்தைவல் முகறகம முகறயாக தபாறுப்சபற்கப்பட்டுள்ளதா சபான்ற விடயங்ககள உள்ளடக்கிய விபரமான அறிக்கைதயான்றிகன ஒரு மாதத்திற்குள் பி.க.அ./க.அ. இனால் குழுவிடம் சமர்ப்பித்தல்.	
எஸ்சதானியாவின் உதவியின் கீழ் நிறுவப்படவுள்ள தைவல் முகறகம இதற்காக உள்நாட்டு ரீதியில் ரூ. 15 மில்லியன் தசலவானகம மற்றும் இம்முகறகமகய நிறுவியதன் பின்னர் சவறு முகறகமைளுடன் தபாருந்துவதற்கான சிக்கல்கள் (compatibility issues) ஏற்படுவதற்கான சாத்தியம் விதப்புகரைள். இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திகணக்களத்தின் பணிகளை முகறப்படுத்துவதற்காக புதிய தமன்தபாருள் முகறகமயிகன துரிதமாக நிறுவ சவண்டும்.	• அமெரிக்க தூதரகத்தின் கீழ் EXBS திட்டத்தின் மூலம் மானியமாக பெறப்படும் தகவல் அமைப்பைப் பெறுவதற்கு அமைச்சர்கள் குழு 23.01.2023 அன்று ஒப்புதல் அளித்துள்ளது. அதன் மேம்பாட்டுப் பணிகள் ஏப்ரல் 2023 முதல் தொடங்கியது. • எஸ்டோனிய மானியம்-உதவி தகவல் அமைப்பு முற்றிலும் மானியம்-உதவி மற்றும் உள்ளூர் நிதிகள் எதுவும் திட்டமிடப்படவில்லை.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 182 இற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
கட்டுப்பாட்டாளர் நாயகம்
இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : இலங்கை சுங்கம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 182

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்கான விசேட செயற்குழு கூட்டம்
2022 ஜூன் 15

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
<u>வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS)</u> இலங்கைச் சுங்கம், கம்பனிகள் பதிவாளர் திணைக்களம், மதுவரித் திணைக்களம், மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் க்ளியர் (தனியார்) கம்பனி என்பவற்றை முறைமையுடன் இடைமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். *இடை* – செயற்பாட்டுச் சட்டகம் மற்றும் வரி செலுத்துபவர்களை இனங்காண்பதற்கு தனித்துவமான இலக்கமொன்று இல்லாமை, சில நிறுவனங்களில் தகவல் முறைமை ஒன்று இல்லாமை, தகவல் முறைமைகளுக்கு இடையில் நிலவும் பொருத்தப்பாடின்மைகள் போன்ற காரணங்களினால் ஏனைய நிறுவனங்களை முறைமையுடன் இடைமுகப்படுத்தல் (Inter Face) தாமதமடைந்துள்ளதாகவும், தகவல் முறைமைகளைப் பேணிச் செல்வதற்கு ஒரு சமமான தொழில்நுட்பம் இருக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். **விதப்புரைகள்** – வருடாந்தம் ரூபா 2000 பில்லியன்களை ஈட்டுகின்றதும் அரசின் மொத்த வருமானத்தில் 90 சதவீதத்திற்கும் அதிகமாக பங்களிப்புச் செய்கின்றதுமான மதுவரித் திணைக்களம், இலங்கைச் சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் இடை முகப்புச் செய்யும் செயற்பாட்டினை முழுமைப்படுத்தல். – தகவல், தொடர்பாடல் முகவராண்மை	வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS), ICT பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. 182 இல், பக்க இல. 102 இலுள்ள வினாக்களுக்கான பதில்கள் பின்வருமாறு. உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் இலங்கை சுங்கத்தை கூட்டிணைத்தல். இலங்கைச் சுங்கத்தின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் தரவுகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் பகிர்ந்துகொள்ளல். • இலங்கைச் சுங்கத்தின் ASYCUDA முறைமையினை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் RAMIS முறைமையுடன் கூட்டிணைப்பட்டுள்தோடு, அதற்கமைய, தரவுகள் தன்னியக்க முறையில் RAMIS முறைமைக்கு மாற்றப்படுகிறது. இலங்கை சுங்கம் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடம் பின்வரும் தரவுகளை கோரியுள்ளதோடு RAMIS முறைமை மேம்படுத்தப்படுவதன் காரணமாக குறித்த செயற்பாடுகள் இன்னும் நிலுவையில் உள்ளன. • இலங்கை சுங்கத்தில் வர்த்தகர்களைப் பதிவு செய்கையில் சரிபார்ப்பதற்கான பெறுமதிசேர் வரிப் பதிவுத் தரவுகள் • இறக்குமதி பிரகடனங்களை இணங்கச் செய்வதற்காக பெறுமதிசேர் வரிக் கடன் உறுதிச் சீட்டுத் தரவுகள்.

அலுவலர்கள் பங்குபற்றும் அடுத்த தினம் (16.06.2022) இடம்பெறவுள்ள குழுக் கூட்டத்தில் இப் பிரச்சினை தொடர்பாக மேலும் கலந்துரையாடுதல்.	
<u>இலங்கை சுங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்.</u> வருமானத்தை தோற்றுவிப்பதில் தாக்கம் செலுத்தும் விடயங்கள் • வரிக்கொள்கையில் மாற்றங்கள் ஏற்பட்டமை. • வரி விலக்களிப்புக்கள் மற்றும் வரிச் சலுகைகள் • வரையறை/ஒழுங்குறுத்துகை விதித்தல். • இரு தரப்பு மற்றும் பல் தரப்பு ஒப்பந்தங்கள் • பருவகால தாக்கங்கள் (விழாக்கள், போக்குகள் போன்றவை) • பூகோள பொருளாதார மற்றும் அரசியல் நிலமைகள் • திடீர் அபாய நேர்வுகள் • வருமானம் வெளிப்பாய்ச்சல் குறைமதிப்பீடுகள், பொருட்கள் பற்றிய விபரங்களை வெளிப்படுத்தாமை, சட்ட விரோதமாகப் பொருட்களைக் கொண்டுவருதல் மற்றும் இசைவுபடுத்தப்பட்ட வகைப்படுத்தல் குறியீட்டு முறைமை என்பன வருமான வெளிப்பாய்ச்சல் மீது தாக்கம் செலுத்துகின்றன. • குறை மதிப்பீட்டினைத் தடுப்பதற்காக பொருட்கள் இறக்குமதியின் போது கொழும்பு மற்றும் மொரட்டுவை பல்கலைக்கழகங்களின் ஒத்துழைப்புடன் சுங்கப் பிரகடனங்கள் சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பத்திலேயே சரியான மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக மென்பொருள் ஒன்றினைத் தயாரிப்பதற்கென பிரிவொன்று தாபிக்கப்பட்டுள்ளது. • சட்டவிரோதமாக பொருட்கள் தருவிக்கப்படுவதைத் தடுப்பதற்காக ஸ்கேனர் பயன்படுத்தப்படுகின்றது. • பிழையான இசைவுபடுத்தப்பட்ட வகைப்படுத்தல் குறியீட்டு வகைப்படுத்தலைத் தடுப்பதற்கான முன்மொழிவுகளுக்கு மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக திறசேரி செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.	இலங்கை இதுவரை 04 இருதரப்பு மற்றும் பலதரப்பு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது. அவை, (ISFTA - இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் PSFTA - பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் APTA – ஆசிய பசுபிக் வர்த்தக ஒப்பந்தம் SAPTA - சார்க் முன்னுரிமை வர்த்தக ஏற்பாடு) என்பனவாகும். இந்த உடன்படிக்கைகள் இலங்கைக்கு இறக்குமதி வரிச்சலுகைகளை வழங்கினாலும், ஏற்றுமதிகள் அதிகரிப்பதன் மூலம் ஏற்றுமதி வருமானம் அதிகரித்து, அந்நிய செலாவணி நாட்டிற்குள் வருகிறது. ஏப்ரல் மற்றும் திசெம்பர் மாதங்கள் பண்டிகை மாதங்களாக இருப்பதனால், அந்த மாதங்களில் இறக்குமதிகள் ஒப்பீட்டளவில் அதிகரிப்பதனைக் காணலாம். கொழும்பு மற்றும் மொரட்டுவை பல்கலைக்கழகங்களின் ஒத்துழைப்புடன் சுங்கப் பிரகடனங்கள் சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பத்திலேயே சரியான மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக மென்பொருள் ஒன்றினைத் தயாரிப்பது தொடர்பில் பல சுற்றுக் கலந்துரையாடல்கள் இடம்பெற்ற போதிலும், அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டினைப் பெற்றுக்கொள்ள முடியாமற் போயுள்ளது. ஆயினும், இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் மென் பொருளொன்று வடிவமைக்கப்பட்டு வருவதோடு, அதன் prototype இனை இலங்கைச் சுங்கத்தின் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப பிரிவிலுள்ள சேவையகத்தில் (Server) பரீட்சித்துப் பார்ப்பதற்கும் உத்தேசிக்கப்படுகிறது. வருமான உருவாக்கத்தைப் பாதிக்கும் விடயங்கள் மற்றும் காரணிகள் என்பன சுங்கத்தினால் ஆரம்பத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளதோடு, அந்த காரணிகளில் ஏற்படும் வேறுபாடு வருமான ஏற்ற தாழ்வுகள் ஏற்படுவதற்கு வழிவகுக்கின்றது.

விதப்புரைகள் • இலங்கை சுங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்காக பி.க.அ. தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.	பொருட்களின் விலையை நிர்ணயிக்கும் முறையை மிகவும் உகந்த முறையில் பேணுவதற்காக சுங்கத் திணைக்களத்தில் தேசிய இறக்குமதி விலை மதிப்பீட்டு தரவுத் தளப் பிரிவு என்ற சிறப்புப் பிரிவினைத் தாபிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது கொழும்பு துறைமுக வளாகத்தில் சுங்கப் பிரிவில் Rapi-Scan எனப்படுகின்ற ஸ்கேனிங் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளதுடன், இடர்வு முகாமைத்துவ பணிப்பகத்தினால் தானியங்கி முறையில் தெரிவு செய்யப்படுகின்ற கொள்கலன்கள் அனைத்தும் இதன் மூலம் ஸ்கேன் சோதனைக்கு உட்படுத்தப்படுகிறது. பண்டங்களின் வகைப்படுத்தலினை தவறான முறையில் இறக்குமதியாளர்கள் பயன்படுத்துவதை தடுப்பதற்காக சுங்க அதிகாரிகளின் பண்ட வகைப்படுத்தல் தொடர்பான அறிவை விரிவுபடுத்தும் வகையில், அவர்களுக்கு விசேட பயிற்சி பட்டறைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு, சுங்கப் புள்ளிகளில் பண்டங்களை வகைப்படுத்தும் போது ஏற்படுகின்ற பிரச்னைகளை தீர்ப்பதற்காக பண்ட வகைப்படுத்தல் பிரிவும், குறித்த பிரிவுக்கு மேலதிகமாக பண்டப் பெயரிடல் மற்றும் வகைப்படுத்தல் குழுவும் சுங்கத் திணைக்களத்தில் செயல்பட்டு வருகிறது.
<u>வருமான சேகரிப்பை அதிகரித்தல் மற்றும் பணவனுப்பல்களை அதிகரிப்பதற்கான முன்மொழிவுகள்.</u> • ஒன்றுக்கொன்று சமமான பொருட்களுக்காக சமமான தீர்வை வரி விகிதங்களை அறிமுகப்படுத்தல் ஊடாக வரி ஏய்ப்புக்களைக் குறைத்தல் உ-ம் – சோள மாப்பொருள் மற்றும் சோள மாவு • நாடுகளுக்கிடையில் இடம்பெறும் வர்த்தக நடவடிக்கைகள் மீது வரி விதித்தல். • முறையான தேசிய உப பிரிவிடல்கள் (National Sub Division) இல்லாமை காரணமாக சரியான முறையில் வகைப்படுத்த முடியாத பொருட்களுக்காக புதிய தேசிய உப பிரிவிடல்களை அறிமுகப்படுத்தல். • விசேடமாக இனங்காணப்பட்ட பொருட்களுக்காக வரிகளை	பண்ட வகைப்படுத்தல் குறியீடுகள் (HS Code) மற்றும் அவற்றிற்கு நிகரான வரி விகிதங்கள் என்பனவற்றிற்கு அமைய சுங்க வரிகள் விதிக்கப்படுகின்றன. பௌதிக ரீதியாக ஏறத்தாழ ஒரே மாதிரியான பண்டங்கள் சமமற்ற மற்றும் வேறுபட்ட வரி விகிதங்களைக் கொண்டிருந்தாலும், சில சமயங்களில் அவற்றை தொழில்நுட்ப ரீதியாக வேறுபடுத்தி அடையாளங் காண்பது கடினமான விடயம் என்பதனால், தொழில்நுட்ப சிரமத்தினை அடிப்படையாகக் கொண்டு சில இறக்குமதியாளர்கள் குறித்த பண்டங்களை குறைந்த வரி விகிதங்களைக் கொண்ட பண்ட வகைப்படுத்தல் குறியீட்டின் கீழ் தவறாக வகைப்படுத்தி, செலுத்த வேண்டிய வரித் தொகையினைச் செலுத்தாது, ஒப்பீட்டளவில் குறைந்த வரித்தொகை ஒன்றினை செலுத்திவதற்கு நடவடிக்கை எடுப்பதுவும்

அறிமுகப்படுத்தல்/ வரியை அதிகரித்தல்.

உ+ம் 50-55, 58 மற்றும் 60 ஆம் பந்திகளின் கீழ் புடவைகளுக்கான பெறுமதி சேர்த்தல் வரியை (VAT) கருத்திற் கொள்கின்ற போது , இந்தப் பொருட்கள் பொதுவாக மிகைத்து விலை மதிக்கப்பட்டுள்ளன. அளவு மீது ஒரு செஸ் (CESS) வரி ஏற்கனவே ஏற்புடையதாக இருப்பது இதற்கான காரணமாகும்.

இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து ஏற்றுமதிப் பணவனுப்பல்கள் கிடைக்கப் பெறுவதனை கண்காணிப்பதற்காக பணவனுப்பல் முகாமைத்துவ முறைமையொன்றினைத் தயாரித்தல்.

- மனித தலையீடுகளைக் குறைப்பதற்காக ஏனைய அரச நிறுவனங்களுடன் இணைந்து தன்னியக்க முறைமையொன்றினை செயற்படுத்துவதை துரிதப்படுத்தல்.
- வர்த்தக நடவடிக்கைகளின் வசதிக்காக சிவப்பு, மஞ்சல், பச்சை, மற்றும் முழுமையான தீர்வை வரி விலக்களிக்கப்பட்ட வகையில் இறக்குமதிப் பொருட்களுக்காக அபாய முகாமைத்துவ தகவுத்திறன்களை அறிமுகப்படுத்துவதன் ஊடாக அகற்றலின் பின்னரான கணக்காய்வுச் செயற்பாட்டினை வலுவூட்டல்.
- சட்டவிரோதமான முறையில் பொருட்களை நாட்டுக்குள் கொண்டு வருவதனைத் தடுப்பதற்காக சுங்கத்தின் கடற் படைப் பிரிவை வலுவூட்டுதல்.

அதானிக்கப்பட்டது.

அதன்படி, இவ்வாறு ஏற்படுவதற்கு முடியுமான முறைகேடுகளைத் தடுப்பதற்கான ஒரு நடவடிக்கையாக, ஏறத்தாழ பௌதிக ரீதியாக ஒரே மாதிரியான ஒற்றுமைகளைக் காட்டும் பிற வகைப்பாடு குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பண்டங்களுடன் பொருந்திச் செல்கின்ற தீர்வு வரியின் அளவுகளை சமப்படுத்துவது பொருத்தமானது என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

தேசிய உப பிரிவுகளை (NSD) உருவாக்குவதற்காக இலங்கை சுங்கம், வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்திடம் (TIP) கோரிக்கையை முன்வைக்கும் போது மாத்தரமே குறித்த தேசிய உப பிரிவுகள் உருவாக்கப்படுகின்றன. ஏதேனுமொரு தேசிய உப பிரிவு (NSD) உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம் இலங்கை சுங்கத்தால் உணரப்படுகையில், அது முதலில் வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்திற்கு (TIP) அறிவிக்கப்பட்டு, குறித்த திணைக்களத்தின் அனுமதியும் பெறப்படுகிறது.

தேசிய உப பிரிவுகளை (NSD) உருவாக்குகையில் தற்போது குறித்த தேசிய உப பிரிவுகளுக்கான (NSD) மேலதிக விளக்கக் குறிப்புகள்" "Supplementary Explanatory Notes" இல்லாமையானது முக்கிய பிரச்சினையாக காணப்படுகிறது. ஆயினும், அப்பணிகள் தற்போது அதற்கென திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட விசேட குழுவொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உள்ளகப் பணவனுப்பல்களை கண்காணிப்பதற்காக இலங்கை மத்திய வங்கியால் முறைமையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதன்படி, இலங்கைச் சுங்கத்தினால் எதிர்பார்க்கப்படுகின்ற பணவனுப்பல்கள் தொடர்பான தரவுகளுடன் ஏற்றுமதி பிரகடனத் தரவுகளும் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்படுகிறது. மேலும், கண்காணிப்பு செயல்முறைக்காக அனைத்து வணிக வங்கிகளும் உள்ளக பணவனுப்பல்கள் தொடர்பிலான தரவுகளை இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்புதல் வேண்டும்.

மனித தலையீட்டைக் குறைப்பதற்காக ஏனைய சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்களிடையே ஓர் ஒருங்கிணைந்த தன்னியக்க வலையமைப்பு

	முறைமையொன்று தற்போது நடைமுறையில் உள்ளது. அதற்கமைய, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பான சுங்கப் பிரகடனமானது, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் RAMIS அமைப்புக்கும், சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் தொடர்பான சுங்கப் பிரகடனங்கள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கும் தான்னியக்க முறையில் அனுப்பப்படுகிறது. அவ்வாறே, சுங்கத்திலிருந்து பொருட்களை விடுவிப்பதற்காக ஒப்புதல் தேவைப்படுகின்ற ஏனைய அரசு நிறுவனங்களுக்கான ஒப்புதலானது, Asycuda அமைப்பு ஊடாக மெய்நிகர் வழியில் வழங்கப்படுகிறது. இந் நோக்கத்திற்காக, 15 அரச நிறுவனங்கள் Asycuda அமைப்பில் தற்போது இணைக்கப்பட்டுள்ளன. சுங்கப் பிரகடனங்களுக்கான வரிகள் மற்றும் ஏனைய பிற கட்டணங்களை மெய்நிகர் வழியில் செலுத்துவதற்கான வசதிகள், இலங்கை வங்கி மற்றும் LankaPay என்பனவற்றில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இறக்குமதி செய்வதற்காக இலங்கையிலிருந்து வெளியே அனுப்பப்படும் பணவனுப்பல்கள் வணிக வங்கிகளுக்கு மெய்நிகர் வழியாக அசிகுடாவிற்கு அனுப்புவதற்கும் வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் அவ்வாறு வருகின்ற பணவனுப்பல்களுக்காக மாத்திரம் இறக்குமதி சுங்கப் பிரகடனங்களை சமர்ப்பிப்பதற்கானவசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், ஏற்றுமதி மூலம் பெறப்படும் பணவனுப்பல்கள் முறையாகப் இலங்கைக்கு கிடைக்கப்பெறுகின்றதா என்பதனை பரீட்சித்துப் பார்ப்பதற்காக ஏற்றுமதி சுங்கப் பிரகடனங்கள் (CusDec) இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்படுகின்றன. அகற்றலின் பின்னரான கணக்காய்வுச் செயற்பாட்டினை வலுப்படுத்தும் வகையில் அதற்காக இடர்வு முகாமைத்துவப் பிரிவு தலையிடுதல் மற்றும் அதற்கான வழிகாட்டுதல்கள் என்பன முக்கியமானதாகும். இற்றை வரையில் இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற இறக்குமதிகளுக்கு வசதி வாய்ப்புக்களை வழங்குவதற்கும்

	அவ்வாறே, கணக்காய்விற்காக அவற்றினை இலக்கிடும் நோக்கிலும், இறக்குமதிப் பண்டங்கள் பல வகைகளின் கீழ் அடையாளம் காணப்படுகின்றன. இந்த அடையாளங் காணும் செயற்பாடானது, மனித தலையீடின்றி தன்னியக்க கனணி முறைமையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இதில், குறைந்த இடர்வு கொண்ட அல்லது இடர்வு இல்லாதவை எனக் கருதப்படுகின்ற பண்ட இறக்குமதிகளுக்கு பச்சை நிறத்தின் (Green Channel) கீழ் வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இவை சோதனையின்றி விடுவிக்கப்படுகின்றன. நடுத்தர அளவிலான இடர்வினைக் கொண்ட இறக்குமதிகள் மஞ்சள் நிறத்தின் கீழ் அடையாளப் படுத்தப்பட்டு, ஒரு குறிப்பிட்ட சதவீதம் வரையில் விடுவிக்கப்படுவதற்கு முன்னர் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. அதிக இடர்வினைக் கொண்ட பண்டங்கள் (High Risk Cargo) என கணினி முறைமையால் அடையாளப்படுத்தப்பட்ட இறக்குமதிகள், சுங்க சோதனை மையங்களில் (Yard) முழு அளவில் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. கணக்காளய்விற்குப் பின்னரான இறக்குமதிகள் அல்லது இறக்குமதிசெய்யும் நிறுவனங்களைத் தேர்ந்தெடுக்கும் போது, வெற்றிகரமான சோதனையினை மேற்கொள்ள ஒத்துழைக்கின்ற நடைமுறையொன்றாக இந்த நடைமுறை காணப்படுகின்றது. அதற்கமைய, இடர்வுத் தன்மையின் அடிப்படையில் கணக்காய்விற்குப் பின்னரான அகற்றலினை இலக்காகக் கொண்டு, குறைந்த பணியாளர்கள் மற்றும் திறமையான மனிதவளத்தின் மூலம் மிகவும் துல்லியமான மற்றும் வெற்றிகரமான கணக்காய்வொன்றினை மேற்கொள்வதற்கு பின் கணக்காய்வுப் பணிப்பகத்திற்கு நடாத்துவதற்கு முடிந்துள்ளது. தற்போது, சுங்க கடற்படை பிரிவை வலுப்படுத்த தேவையான படகுகள், தகவல் தொடர்பு மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட உபகரணங்களை கொள்வனவு செய்வது (தற்போதைய பொருளாதார சூழ்நிலையில்) அசாத்தியமானதொரு விடயமாகும். ஆகையால், சுங்க கடற்படை பிரிவை கட்டியெழுப்புவதற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல் தொடர்பில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் ஆஸ்திரேலிய கடல் எல்லை

	கட்டுப்பாட்டுப் படை அதிகாரியுடன் (AUSTRALIAN Boarder Control Force) நடைபெற்ற சமீபத்திய சந்திப்பின் போது மேற்குறித்த விடயம் முன்வைக்கப்பட்டதோடு, இதற்கு சிறந்த பதிலும் கிடைக்கப் பெறும் எனவும் எதிர்பார்க்கிறேன்.
<u>HS குறியீடுகளின் மாற்றம்</u> அத்தகைய முறைகேடுகளை தவிர்த்துக் கொள்ளும் முகமாக திணைக்களத்தினால் ஏற்கனவே சரியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாக க.அ குறிப்பிட்டார்.	**இல. 13, இசைவுபடுத்தப்பட்ட வகைப்படுத்தல் குறியீட்டு முறைமையினை மாற்றுதல்.** இதுபோன்ற முறைகேடுகளைத் தடுப்பதற்காக, திணைக்களம் ஏற்கனவே உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. √ அனைத்து இறக்குமதியாளர்களும் தமது இறக்குமதிச் சுங்கப் பிரகடனங்கள் அனைத்தையும் கட்டாயமாக மெய்நிகர் (online) வழியில் சமர்ப்பித்தல் √ குறித்த இறக்குமதிப் பிரகடனத்துடன் தொடர்பான இறக்குமதி ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் யாவும், அந்தப் பிரகடனத்துடன் பதிவேற்றம் செய்யதல். √ அவ்வாறில்லாத எந்தவொரு இறக்குமதி பிரகடனத்தினையும் செயல்படுத்த (Process) வேண்டாம் என்றும் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளும் அறிவுறுத்தப்படல். √ பண்ட சோதனை மையத்தினைத் தீர்மானித்தல், நுளைவாயல் அனுமதி அட்டையினை அச்சடித்தல், பண்ட சோதனை உத்தரவு மற்றும் பண்டத்தினை வெளியகற்றுவதற்கான அனைத்து கட்டளைகள் என்பன கனணி மூலம் தீர்மானிக்கப்படும் வகையில் Asycuda தரவு முறைமையினை இற்றைப்படுத்தல். √ இறக்குமதியாளரால் சமர்ப்பிக்கப்பட்ட வகைப்பாட்டு குறியீட்டு இலக்கமானது, (HS Code) குறித்த சுங்கப் பிரகடனத்துடன் பதிவேற்றப்பட்டுள்ள ஆவணங்களால் தீர்மானிக்கப்பட முடியாது என்ற நிலை காணப்படின், மேலதிக அறிக்கைகளை பதிவேற்றுமாறு இறக்குமதியாளரைக் கோருவதற்கும், குறித்த ஆவணங்களைப் பதிவேற்றியதன் பின்னரும், சம்பந்தப்பட்ட வகைப்பாட்டு இலக்கம் தொடர்பில் சுங்க ஆவணங்களை சரிபார்க்கும் அதிகாரிக்கு சந்தேகம் ஏதும் இருப்பின், அவர் தனது சந்தேகத்திற்கு காரணமான அனைத்து விடயங்களையும் சுங்கப் பிரகடனத்தில் பதிவேற்றி பண்டங்களைப் பரிசோதிக்கும் மையங்களிலுள்ள அலுவலர்களுக்கு குறித்த

	ஆவணங்களை இறக்குமதிப் பண்டங்களுடன் ஒப்பீட்டுப் பார்த்து தீர்மானமொன்றினை எடுக்குமாறு கோரிக்கை ஒன்றினை சம்பந்தப்பட்ட இறக்குமதி பிரகடனத்திற்கு பதிவேற்றுவதற்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். √ பண்ட சோதனை மையங்களிலுள்ள அலுவலர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் இறக்குமதிப் பண்ட ஆவணங்களுடன் ஒப்பீடுசெய்யப்பட்டு, சுங்கப் பிரகடனத்திலுள்ள வகைப்பாட்டு இலக்கத்துடன் குறித்த வகைப்பாடு இலக்கங்கள் பொருந்தாவிடின், அது குறித்து இறக்குமதியாளரை அறிவூட்டி, இறக்குமதியாளர் குறித்த தீர்மானத்துடன் திருப்திப்படாதவிடத்து, இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களுடன் தொடர்புபற்ற ஆவணங்களை குறித்த மாதிரிகளுடன் பண்ட வகைப்பாட்டுப் பிரிவிற்கு அனுப்புவதற்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். √ பிரகடனப் பணிப்பக உத்தியோகத்தர்களுக்கு பண்ட வகைப்பாடு தொடர்பில் தொடர்ச்சியாக விரிவுரைகள் மற்றும் பயிலரங்குகள் என்பனவற்றை நடாத்துவதன் ஊடாக அவர்களுக்கு தமது அறிவை மேலும் வளர்த்துக் கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. √ உலக சுங்க அமைப்பினால் நடாத்தப்படும் பண்ட வகைப்படுத்தல் (Commodity Classification) குறித்த மாநாடுகளில் பண்ட வகைப்படுத்தல் பிரிவின் அதிகாரிகளை பங்கேற்கச் செய்வதன் மூலம் அவர்களின் விடய அறிவை இற்றைப்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
<u>2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை எரிபொருள் மீதான உற்பத்தி வரிகளிலிருந்து பெற்ற வருமானம் 72 சதவீதத்தால் குறைவடைதல்.</u> எரிபொருள் விலை அதிகரிப்பை தடுப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட வரி விலக்களிப்பு காரணமாக எரிபொருள் உற்பத்தி வரி குறைந்ததாக பி.க.அ / க.அ. தெரிவித்தார்.	2022 ஆம் ஆண்டு முதல், எரிபொருள் வரிச் சதவீதம் கணிசமாக அதிகரித்துள்ளது. இறக்குமதி செய்யப்படும் எரிபொருளின் அளவு குறைந்துள்ள போதிலும், விதிக்கப்படும் வரியின் அளவில் அதிகரிப்பும் காணப்பட்டுள்ளது. தற்போது பெற்ரோலுக்காக ரூ. 77/- வரையிலும் டீசலுக்காக ரூ. 63/- வரையிலும் உற்பத்தி வரியொன்று விதிக்கப்பட்டுள்ளது. மேலும், சுங்க வரி மற்றும் துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (PAL) என்பனவும் விதிக்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வரி

	சதவீதங்களில் அதிகரிப்பினைக் காட்டிய போதிலும், இறக்குமதி அளவில் வீழ்ச்சி ஏற்பட்டதன் காரணமாக வருமானம் பாரியளவில் அதிகரிப்பினைக் காட்டவில்லை. 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 5% வருமான அதிகரிப்பு காணப்படுகின்றது.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 182 இற்காக இலங்கை சுங்கத் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
சுங்கப் பணிப்பாளர் நாயகம்
இலங்கை சுங்கம்

திணைக்களத்தின் பெயர் : வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 182

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்கான விசேட செயற்குழு கூட்டம்
2022 ஜூன் 15

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
அவதானிப்புக்கள, பரிந்துரைகள் / வழிகாட்டுதல்கள் இல. 12 – "வருவாய் சேகரிப்பு மற்றும் பணம் அனுப்புதலை மேம்படுத்துவதற்கான திட்டங்கள்.	இக் குறிப்பிட்ட விடயம் 2022 ஜூன் 15 அன்று பொது நிதிக் குழுவில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது அக் கூட்டத்தில் இத் திணைக்களம் பிரதி நிதித்துவம் செய்யப்படவில்லை, மேலும் இத்திட்டங்களும் இத் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட வில்லை. எவ்வாறாயினும், குறிப்பிடப்பட்ட திட்டங்களில் நான்கு (4) திட்டங்களுக்கு மட்டுமே இத் திணைக்களத்தின் அவதானிப்புக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. i. நெருங்கிய தொடர்புடைய தயாரிப்புக்களுக்கு ஒத்த கட்டண விகிதங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் வரி ஏய்ப்பைக் குறைத்தல். உதாரணம். சோளக் கஞ்சிப் பசை (Corn Starch) மற்றும் சோள மாவு. ஒரு குறிப்பிட்ட தயாரிப்பு / ஒரு பொருளின் தன்மைக்கு பெறுமதி சேர்க்கப்கட்டதன் அடிப்படையில் பொருட்கள் வகைப்படுத்தப் படுகின்றன இதற்கு இயைபு முறைக் குறியீடுகளில் (HS Codes) கட்டண விகிதங்கள் பொருந்தும். இது ஒரு தர்க்கரீதியான வரிசையில் பொருட்களை வகைப்படுத்தப் பயன் படுகின்றது. பொருட்கள் மூலப் பொருட்கள், இடைநிலை அல்லது முடிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை தனித்தனியாக வகைப்படுத்தப் படுகின்றன. மேலும் ஒத்த தன்மையான பொருட்களை வகைப்படுத்த முடியாது. இருப்பினும், பொருட்கள் ஒன்றுக்கொன்று நெருக்கமாக ஒத்திருக்கின்றன மேலும் சுங்க விடுவிப்புப் புள்ளியில் இது தனித்தனியாக வேறுபடுத்த முடியாதவை எனவே அதே கட்டண விகிதத்தில் வசூலிக்கப்படலாம். சோளக் கஞ்சிப் பசை மற்றும் சோள மாவு விடயத்தில், இவை நோக்கத்தின் அடிப்படையில் இரண்டு வெவ்வேறு தயாரிப்புகள் மற்றும் இரண்டு வெவ்வேறு கடமை விகிதங்களை ஈர்க்கலாம். ii. நாடுகளுக்கிடையேயான வணிக வர்த்தகத்தின் மீதான வரிவிதிப்பு "நாடுகளுக்கிடையேயான வணிக வர்த்தகத்தின் மீதான வரிவிதிப்பு" என்ற முன்மொழிவு, அதன் ஆங்கில மொழிபெயர்ப்பில் "எல்லை தாண்டிய

மின் வணிகத்தின் வரிவிதிப்பு" (Taxation of Cross-Border E-Commerce) என்று அறிக்கையில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, இவை இரண்டு தனித்தனி விடயங்களாகக் காணப்பட்டதுடன் அவதானிப்புகள் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகின்றன.

- நாடுகளுக்கிடையேயான வணிக வர்த்தகத்தின் மீதான வரிவிதிப்பு

  நாடுகளுக்கிடையேயான வர்த்தகத்தின் போது, இறக்குமதி வரி விதிப்பு முறையானது சம்பந்தப்பட்ட நாட்டின் தேவைகளுக்கு ஏற்ப செயற்படுத்தப்பட்டு வருகிறது. அதாவது, நுகர்வுப் பொருட்கள் அல்லது மூலதனப் பொருட்கள், அத்தகைய பொருட்கள் மூலப்பொருளா, இடைநிலைப் பொருட்களா அல்லது முடிவுப் பொருட்களா என்பதன் அடிப்படையில்.

  எடுத்துக்காட்டாக, ஒரே மாதிரியான பொருட்களை உற்பத்தி செய்யும் உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாக்கும் நோக்கில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு அதிக கட்டண விகிதங்கள் விதிக்கப்படுகின்றன. இதேபோல், மூலப்பொருட்கள் மற்றும் முடிக்கப்படாத பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் போது வரிச் சலுகைகள் வழங்கப்படும் நிகழ்வுகளும் உள்ளன. மேலும், கட்டண விகிதங்கள் பொருத்தமான பங்குதாரர்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் கோரிக்கையின் பேரில் திருத்தங்களுக்கு உட்பட்டது. மேலும், நாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தின் மீது வரி விதிப்பது வெறும் வருமான சேகரிப்புக்காக மட்டும் அல்ல, நாட்டின் தேவைகளைப் பொறுத்து பல்வேறு காரணங்களுக்காகவும் மேற் கொள்ளப்படுகிறது.

- நாடுகளுக்கிடையேயான இலத்திரணியல் வர்த்தகத்தின் மீதான வரிவிதிப்பு

  இலத்திரணியல் வர்த்தகமானது, உலகளாவிய நிகழ்வாக இருப்பதால், இலங்கையில் வளர்ந்து வரும் வர்த்தக பரிவர்த்தனை முறையாகும். இது 2019 க்கு முன்பே அடையாளம் காணப்பட்டது மற்றும் அத்தகைய பரிவர்த்தனைகளுக்கு வரி விதிக்க கவலை இருந்தது. எவ்வாறாயினும், அந்த காலகட்டத்தில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இ- வர்த்தகம் மீது வரி விதிப்பது ஒரு கொள்கை உத்தரவாக செயல்படவில்லை.

  எவ்வாறாயினும், அலிபாபா, உபெர், ஈபே, அமேசான், டராஸ் போன்ற சர்வதேச இ-வணிக ஆபரேட்டர்கள் மற்றும் இ-வணிக வர்த்தகத்தில் ஈடுபடும் பிற பங்குதாரர்கள் மீது எதிர்காலத்தில் வரி விதிக்க கொள்கை பரிசீலனை உள்ளது.

	iii. சரியான தேசிய உப பிரிவுகள் (National Sub Divisions -NSDs) இல்லாததால் சரியான முறையில் வகைப்படுத்த முடியாத தயாரிப்புகளுக்கு புதிய தேசிய உப பிரிவுகளை அறிமுகப்படுத்தல். உள்ளூர் நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் மேற்கொண்ட கோரிக்கைகளுக்கு இடமளிக்கும் வகையில் இலங்கை சுங்கத்தின் ஒப்புதலுடன் புதிய தேசிய உப பிரிவுகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே 2022 ஆம் ஆண்டின் 56 தேசிய உப பிரிவுகள் உருவாக்கப்பட்டன அதே வேளை 2023 இல் 12 தேசிய உப பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் 14 தொடர்புடைய இயைபு முறை குறியீடுகளுக்கு பொருத்தமான விளக்கங்களும் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அந்த திருத்தங்கள் 2023.01.01 இன் 2312/75 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 07/2022 ஆம் இலக்க வருமானப் பாதுகாப்புக் கட்டளை மூலம் நடைமுறைக்கு வந்துள்ளன. iv. குறிப்பாக அடையாளம் காணப்பட்ட பொருட்களுக்கான வரிகளை அறிமுகப்படுத்துதல் / அதிகரித்தல். நாட்டின் அந்நியச் செலாவணி இருப்புக்களைப் பாதுகாப்பதற்காக இலங்கை மத்திய வங்கி பரிந்துரைத்ததன் படி 2022.05.31 ஆந் திகதி முதல், தேர்ந்தெடுக்கப்பட்ட சில இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு விதிக்கப்படும் வரிகள், சுங்க இறக்குமதி வரிகளை அதிகரிக்கின்றன. இது 2023 வரவு செலவுத்திட்டங்களுக்கு இணங்க 2022.11.14 ஆந் திகதி வழங்கப்பட்டது. சுங்க இறக்குமதி வரி மற்றும் செஸ் அறவீடு ஆகியவற்றின் அலகு விகிதங்களைச் சரி செய்வதன் மூலம் கடமையின் கீழ் விரி வலக்கு மற்றும் கடமையின் கீழ் மதிப்பீடு என்பனவற்றின் நடைமுறையிலுள்ள மாற்று வீதங்களை உறுஞ்சுவதை தவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் திறந்த கணக்குகளின் அடிப்படையில் பொருட்களை இறக்குமதி செய்வதைக் கட்டுப்படுத்த 1969 ஆம் ஆண்டின் 01 இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் ஒழுங்கு முறைகள் விதிக்கப்பட்டன.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 182 இற்காக வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
பணிப்பாளர் நாயகம்
வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத்திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 182

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
2022 ஜூன் 09

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
<u>வெளிநாட்டு திட்டங்களுக்கான அர்ப்பணிப்பு கட்டணம்</u> • 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வெளிநாட்டு திட்டங்களுக்கான உறுதி கட்டணம் ரூபா 4 பில்லியன் மற்றும் ரூபா 1.8 பில்லியன் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டதாகவும்இ முறையான திட்ட முகாமைத்துவ செயல்முறையின் மூலம் இந்நிலையை தவிர்க்க முடியும் என்றும் குழு கருதியது. <u>திட்டப்பணிகள் நிறுத்தப்பட்டதால்இ அரசுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது எந்தவித தர்க்க அடிப்படையும் இல்லாமல் சில திட்டங்கள் பாதியில் நிறுத்தப்படுவதால்இ அரசுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது.</u> • திட்டப்பணிகள் நிறுத்தப்பட்டதால்இ அரசுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது எந்தவித தர்க்க அடிப்படையும் இல்லாமல் சில திட்டங்கள் பாதியில் நிறுத்தப்படுவதால்இ அரசுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. வெளிநாட்டு வளங்கள் திணைக்களமானது இந்த திட்டங்களுக்கு அனுமதி வழங்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளாதுஇ திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளை வழங்கும் பொறிமுறையை மாத்திரமே நிர்வகிப்பதாக அவர் கூறினார். மேலும்இ பல ஆண்டுகள் நீடிக்கும் திட்டங்களுக்குப் பணம் செலவு (னளைடிரசளந) செய்யப்படும்இ மேலும் இந்தப் பணத்தின் செலவு தொடர்பாக பணப் புழக்க (ஊயளா கடழற) விளக்கப்படம் தயாரிக்கப்படும் செலவழிக்கப்பட்ட பணத்துக்கு வட்டியும் (வைநெசநளவ)இ செலவழிக்கப்படாத பணமும் (ரனெளைடிரசளவ அழநெல) தொடர்பான உறுதிக் கட்டணம் (உழஅஅவைஅநவெ) அந்த ஆண்டு செலுத்த வேண்டும். விளக்கினார். அதன்படிஇ திட்டத்திற்கு	வெளிநாட்டு வளங்கள் திணைக்களமானது இந்த திட்டங்களுக்கு அனுமதி வழங்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளாது, திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளை வழங்கும் பொறிமுறையை மாத்திரமே நிர்வகிப்பதாக அவர் கூறினார். மேலும், பல ஆண்டுகள் நீடிக்கும் திட்டங்களுக்குப் பணம் செலவு (disburse) செய்யப்படும், மேலும் இந்தப் பணத்தின் செலவு தொடர்பாக பணப் புழக்க (Cash flow) விளக்கப்படம் தயாரிக்கப்படும் செலவழிக்கப்பட்ட பணத்துக்கு வட்டியும் (interest), செலவழிக்கப்படாத பணமும் (undisburst money) தொடர்பான உறுதிக் கட்டணம் (commitment) அந்த ஆண்டு செலுத்த வேண்டும். விளக்கினார். அதன்படி, திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கும் பங்களிப்பு மாநிலங்களின் பங்களிப்பை உரிய காலத்தில் செலுத்த வேண்டும் என்றும், குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு மேல் திட்டத்தை விரைவுபடுத்த முடியாது என்றும் தெரியவந்துள்ளது. எவ்வாறாயினும், பல்வேறு காரணங்களால் திட்ட தாமதங்களைத் தவிர்ப்பதற்காக, நிதி அமைச்சு 2020.02.12 தேதியிட்ட MOFPE&PD/ERD/2020/1 என்ற சுற்றறிக்கையை வெளியிட்டது, "வெளிநாட்டு / உள்ளூர் நிதியை திறம்பட வழங்குவதற்கான திட்டத் தயார்நிலையை உறுதி செய்தல் மற்றும் திட்டத்தை வலுப்படுத்துதல்" (Ensuring Project Readiness for Effective Disbursment of Foreign / Local Financing and Strentgthning the Project Managment). அதன்படி, ஒரு திட்டத்திற்கான அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பிக்கும் முன், திட்டத்தில் தாமதம் ஏற்படக்கூடிய விஷயங்களைக் கணித்திருக்க வேண்டும் என்றும், திட்ட தாமதத்தால் பொறுப்புக் கட்டணங்கள் குவிவதைக் குறைக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

நிதியுதவி அளிக்கும் பங்களிப்பு மாநிலங்களின் பங்களிப்பை உரிய காலத்தில் செலுத்த வேண்டும் என்றும்இ குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு மேல் திட்டத்தை விரைவுபடுத்த முடியாது என்றும் தெரியவந்துள்ளது. எவ்வாறாயினும்இ பல்வேறு காரணங்களால் திட்ட தாமதங்களைத் தவிர்ப்பதற்காகஇ நிதி அமைச்சு 2020.02.12 தேதியிட்ட ஆழுகீநுரூனு.'.நுசுனு.'.2020.'.1 என்ற சுற்றறிக்கையை வெளியிட்டதுஇ "வெளிநாட்டு / உள்ளூர் நிதியை திறம்பட வழங்குவதற்கான திட்டத் தயார்நிலையை உறுதி செய்தல் மற்றும் திட்டத்தை வலுப்படுத்துதல்" (நுளெரசபை *சழதநஉவ சுநயனநைளள கழச நுகநஉவளைந ளுளைடிரசளஅநவெ ழக குழசநபைஎ ∴ டுழஉயட குயெஎஉபை யனெ ளுவசநவெபவாபைபெ வாந *சழதநஉவ ஆயயெபஅநவெ). அதன்படிஇ ஒரு திட்டத்திற்கான அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பிக்கும் முன்இ திட்டத்தில் தாமதம் ஏற்படக்கூடிய விஷயங்களைக் கணித்திருக்க வேண்டும் என்றும்இ திட்ட தாமதத்தால் பொறுப்புக் கட்டணங்கள் குவிவதைக் குறைக்க முடியும் என்றும் அவர் கூறினார்.	
<u>இலகுரக ரயில் போக்குவரத்து திட்டம் முடங்கியது</u> ரூபா 5 பில்லியன் மற்றும் இலகு ரயில் போக்குவரத்து திட்டத்தால் பாதியில் நிறுத்தப்பட்டதுஇ கூடுதல்ரூபா5 பில்லியன் அபராதத்துடன் அரசுக்கு ரூபா 10 ஆயிரம் கோடி இழப்பு. இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுடன் மொத்த பெறுமதி 1.85 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். 2.2 பில்லியன் ரூபாயில்இ 40 வருட காலத்திற்குஇ ஜப்பானிய அரசாங்கத்தின் கடன் மானியத்தின் அடிப்படையில் செயற்படுத்தப்படவிருந்த இலகு ரயில் திட்டம்இ அதன் செயற்பாட்டின் போது இலகு ரயில் திட்டத்தை நிறுத்துமாறு ஜனாதிபதி செயலகத்தினால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. நி கூறினார். இதன்படிஇ அமைச்சரவையின் நீண்ட கலந்துரையாடலின் பின்னர்இ திட்டத்தை நிறுத்த அமைச்சரவை தீர்மானித்தது மற்றும் இந்த கடன் ஒப்பந்தத்தை முடிப்பதற்கான நடவடிக்கைகளைத் தொடங்குமாறு தனது துறைக்கு அறிவுறுத்தியது. வெளிப்படுத்தப்பட்டது இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுடன் மொத்த பெறுமதி 1.85 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். 2.2 பில்லியன் ரூபாயில், 40 வருட காலத்திற்கு, ஜப்பானிய அரசாங்கத்தின் கடன் மானியத்தின் அடிப்படையில் செயற்படுத்தப்படவிருந்த இலகு ரயில் திட்டம், அதன் செயற்பாட்டின் போது இலகு	2017/2018 ஆம் ஆண்டிற்குள் நாட்டின் கடன் சுமை மேலும் மோசமடையும் என்பது தெளிவாகத் தெரிந்ததால், வெளிநாட்டு வளத் திணைக்களம், மத்திய வங்கி மற்றும் உலக வங்கியுடன் இணைந்து நடுத்தர கால கடன் மேலாண்மை மூலோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டது. அதன்படி, 13.05.2020 அன்று "வெளிநாட்டு வளங்கள் திரட்டல் 2020-2025" என்ற தலைப்பில் அமைச்சரவைப் பத்திரம் வெளியிடப்பட்டுள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடி அங்கு கணிக்கப்பட்டது. இந்த உண்மைகளின் அடிப்படையில், மேற்கண்ட திட்டத்தைத் தொடர்வது கடினம் என்று அப்போதைய அமைச்சர்கள் குழு முடிவு செய்தது. மேற்குறிப்பிட்ட அமைச்சுப் பத்திரம் வரவிருக்கும் பொருளாதார நெருக்கடியை முன்னறிவித்திருந்தது, ஆனால் தற்போதுள்ள பொருளாதாரக் கொள்கையின்படி இலகுரக ரயில் போக்குவரத்துத் திட்டம் அரசாங்கத்தின் முன்னுரிமைகளில் ஒன்றாகும், எனவே அதைச் செயல்படுத்துவதற்கு அரசாங்கம் அறிவுறுத்தல்களை வழங்கியது. அப்போதைய சூழ்நிலை இருந்தபோதிலும், இந்த திட்டத்தை மீண்டும் செயல்படுத்துவது குறித்து, 23/0389/618/013 - நான் நகர்ப்புற மற்றும் மேம்பாட்டு மற்றும் வீட்டுவசதி அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் ஆகியோரால் அமைச்சரவை பத்திரத்தை சமர்பித்தேன். 20.02.2023 ஆந் திகதிய பிரதம மந்திரியின் செயலாளரின் தலைமையிலான தேசிய செயல்பாட்டு அறைக்கு, மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் மற்றும் உடனடிப் பதிலைப் பரிசீலித்து, திட்டம் தொடர்பான மூலோபாய முடிவுகளை எடுக்குமாறு உத்தரவிடப்பட்டது.

ரயில் திட்டத்தை நிறுத்துமாறு ஜனாதிபதி செயலகத்தினால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. நி கூறினார். இதன்படி, அமைச்சரவையின் நீண்ட கலந்துரையாடலின் பின்னர், திட்டத்தை நிறுத்த அமைச்சரவை தீர்மானித்தது மற்றும் இந்த கடன் ஒப்பந்தத்தை முடிப்பதற்கான நடவடிக்கைகளைத் தொடங்குமாறு தனது துறைக்கு அறிவுறுத்தியது. வெளிப்படுத்தப்பட்டது இலகு ரக இரயில் திட்டத்தை நிறுத்துவதற்கு காரணமான சூழ்நிலையை ஜி.என். 2017/2018 ஆம் ஆண்டிற்குள் நாட்டின் கடன் சுமை மேலும் மோசமடையும் என்பது தெளிவாகத் தெரிந்ததால், மத்திய வங்கி மற்றும் உலக வங்கியுடன் இணைந்து நடுத்தர கால கடன் மேலாண்மை மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்துள்ளதாக வெளிநாட்டு வளத் திணைக்களம் அறிவித்தது. அதன்படி, 13.05.2020 அன்று, "வெளிநாட்டு வளங்கள் திரட்டல் 2020-2025" என்ற தலைப்பில் அமைச்சரவைப் பத்திரம் வெளியிடப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடி கணிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த உண்மைகளின் அடிப்படையில் மேற்படி திட்டத்தை தொடர்வது கடினம் என அமைச்சரவை தீர்மானித்திருக்கலாம். குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மேற்படி திட்டங்களுக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு முன்னரே இவ்வாறான நிலைமைகளை முன்னறிவித்திருந்தால், அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள பெரும் நட்டத்தையும், இராஜதந்திர உறவுகளில் ஏற்பட்டுள்ள சீர்கேட்டையும் தவிர்த்திருக்க முடியும் என குழு சுட்டிக்காட்டியுள்ளது.	அதன்படி, அமைச்சரவையின் முடிவின்படி பெயரிடப்பட்ட நிபுணர்கள் குழுவுடன் கலந்துரையாடியதன் பின்னர், தேசிய செயற்பாட்டு அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை இலக்கம் 23/0953/604/098 இன் கீழ் அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டு 22.05.2023 தேதியிட்ட நிதி அமைச்சர், பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சரவைக்கு வழங்கப்பட்டது. அதன்படி, கொழும்பு புறநகர்ப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கும் பொருளாதார நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கும் உத்தேச இலகு ரயில் போக்குவரத்து முறைமை ஒரு முக்கியமான திட்டமாகும் என்பதை அவதானித்த தேசிய செயற்பாட்டு அலுவலகம், தற்போதுள்ள நிதி மற்றும் பொருளாதார பின்னணி மற்றும் சர்வதேச நாணயத்துடன் ஒப்பந்தம் நிதி, பொது நிதி ஆய்வுகளுக்கு பாதகமானது.பரிவர்த்தனையை பாதிப்பில்லாத வகையிலும், ஜப்பானிய அரசாங்கத்துடனான இராஜதந்திர உறவுகளை பாதிக்காத வகையிலும் மேற்கொள்ள, 22.05.2023 தேதியிட்ட அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றுள்ளது. தேசிய செயல்பாட்டு அலுவலகத்தால் முன்வைக்கப்பட்ட எண். I முதல் V வரையிலான திட்டங்களை செயல்படுத்துவதற்காக. (அமைச்சர் அறிக்கை மற்றும் முடிவு இணைக்கப்பட்டுள்ளது.) இதன்படி, ஜப்பானிய அரசாங்கம் மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகமையுடன் (JICA) I மற்றும் II முன்மொழிவுகள் தொடர்பாக கலந்துரையாடிய பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 182 இற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
பணிப்பாளர் நாயகம்
வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : **கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : **182**

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
2022 ஜூன் 09

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
<u>தேசிய மதிப்பீட்டுக் கொள்கையின் (National Evaluation Policy) முக்கியத்துவம்</u> வெளிநாட்டுக் கடன்களை ஒழுங்காக நிர்வகிப்பதற்கான அத்தகைய கொள்கையின் முக்கியத்துவத்தை விளக்கிய குழு, தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை வகுப்பதில் கவனம் செலுத்துமாறு குழுவைக் கேட்டுக் கொண்டது.	திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட இலங்கையின் தேசிய மதிப்பீட்டுக் கொள்கை (NEP) அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது மற்றும் ஏற்கனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் 'EvalColombo 2018 இல் வெளியிடப்பட்டது. அமைச்சரவை உத்தரவுகளின்படி இந்தக் கொள்கை நாடாளுமன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திட்டங்கள் மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதில் தாமதம் மற்றும் திறமையின்மை ஆகியவை பொது முதலீடுகளில் இருந்து உகந்த முடிவுகளை உருவாக்குவதில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே தேசிய மதிப்பீட்டுக் கொள்கையைச் செயல்படுத்துவதற்கான கட்டமைப்பானது, மதிப்பீட்டுக் கொள்கையைச் செயல்படுத்துவதற்குத் தேவையான உத்திகள், வழிகாட்டுதல்கள், தரநிலைகள் மற்றும் நெறிமுறைகள் உள்ளிட்ட விரிவான ஆலோசனை செயல்முறைக்குப் பிறகு தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் அரசாங்கத்தின் நிர்வாகக் கட்டமைப்பின் அனைத்து மட்டங்களிலும் உள்ள வளர்ச்சித் திட்டங்களை நிறுவனமயமாக்குவதற்கான தொடர் பயிற்சிகள் மற்றும் ஆலோசனைகள் இந்த ஆண்டு ஏப்ரல் முதல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 182 இற்காக கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைத் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
பணிப்பாளர் நாயகம்
கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : தேசிய திட்டமிடல் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 182

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
2022 ஜூன் 09

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
<u>கடன் ஒப்பந்தங்களில் நுழைந்து திட்டங்களை செயல்படுத்தவும்</u> தேசிய பௌதீகத் திட்டத்திற்கு அமைவாக எமது நாடு கடன் உடன்படிக்கைகளை மேற்கொண்டு நாட்டுக்கு அவசியமான திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றதா என ஆராய்தல். எமது நாட்டுக்கு 10 வருட காலப்பகுதிக்கு தெளிவாக இனங்காணப்பட்ட அபிவிருத்தித் திட்டம் இன்மையானது பாரிய குறைபாடாகும் என க.உ. இனால் தெரிவிக்கப்பட்டது. இதன் போது, ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி போன்ற நிறுவனங்களுடன் இணைந்து, 10 வருட காலப் பகுதிக்கு குறிப்பிட்ட அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அதனை நடைமுறைப்படுத்த முடிந்தால், இன்று நாம் எதிநோக்குகின்ற நெருக்கடிகளுக்கு தீர்வு காண முடியும் என க. உ. மேலும் தெரிவித்தார். எமது நாட்டுக்கு 10 வருட அபிவிருத்தித் திட்டம் மாத்திரமன்றி, ஆட்சி மாற்றத்தின் போது அரசியல் கொள்கையின் அடிப்படையில் மாற்றமடையாத பேரண்டப் பொருளாதாரக் கொள்கையும் அவசியம் என இதன் போது பி. க. உ இனால் தெரிவிக்கப்பட்டது. <u>**பரிந்துரை**</u> 10 வருடங்களிற்கு குறிப்பாக இனங்காணப்பட்ட தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தைத் தயாரித்தல் திணைக்களத்தின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு, தயாரிக்கப்பட்ட வேலைத்திட்டம் அதி விரைவாக அறிக்கையிடுமாறு குழுவினால் பி.க.உ. / க.உ. இற்கு உத்தரவு இடப்பட்டது.	தற்போதைய ஜனாதிபதி பிரதமராக இருந்த காலத்தில் 10 வருட அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், கொள்கை ஆய்வுகள் நிறுவனத்தின் (IPS) நிர்வாகப் பணிப்பாளர் மற்றும் பொருளாதார ஆலோசகர் திரு. டேனியல் அல்போன்சஸ் என்போரை உள்ளடக்கிய தேசிய கொள்கை ஆலோசனைக் குழு (NPAC) 2022 ஜூன் 20 இல் நியமிக்கப்பட்டது. தொடர்புடைய தரப்பினரிடையே பல தொடர்ச்சியான கலந்துரையாடல்களுக்குப் பின்னர், உத்தேச தேசிய அபிவிருத்திக் கொள்கை கட்டமைப்பிற்கான அடிப்படைத் திட்டத்தைக் காட்டும் "தொடக்க அறிக்கை" (Inception Report) தயாரிக்கப்பட்டு அதிமேதகு ஜனாதிபதியின் அறிவுறுத்தல்களுக்காக 21.10.2022 இல் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரினூடாக சமர்ப்பிக்கப்பட்டது. இத் தொடக்க அறிக்கையினூடாக, தேசிய அபிவிருத்திக் கொள்கைக் கட்டமைப்பைத் தயாரிப்பதற்கான திட்டம், அதில் உள்ளடக்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் கல்வித் துறையை முன்மாதிரியாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஆரம்பத் திட்டம் ஆகியவற்றின் சுருக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கை 21.10.2022 அன்று ஜனாதிபதியின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டது (தொடக்க அறிக்கையின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது). மேலும், ஜனாதிபதி செயலாளரினால் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரிற்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம், அதிமேதகு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் தனியார் துறை நிபுணர்களுடனான ("பொருளாதார ஸ்திரப்படுத்தல், மீட்சி மற்றும் விருத்தியை மேம்படுத்துவதற்கான குழு - Committee on Economic Stabilization, recovery and promotion of growth" (CESRPF))

	இனால் பொருளாதார ஸ்திரத்தன்மை, மீட்சி மற்றும் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக பத்து வருட காலத்தை நோக்காகக் கொண்டு கொள்கை தயாரிப்பை மேற்கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் தயாரிக்கப்பட்ட இந்த "தொடக்க அறிக்கை" மேற்படி குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு திறைசேரி செயலாளரினால் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு 24.11.2022 அன்று வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் மேற்படி குழுவின் கவனத்திற்கு 28.11.2022 இல் இத் தொடக்க அறிக்கை அக்குழுவின் தலைவர் கலாநிதி ஆர்.எச். எஸ் சமரதுங்க அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அக் குழுவினால் வழங்கப்படுகின்ற உத்தரவுகளின் பிரகாரம், பத்தாண்டு தேசிய அபிவிருத்திக் கொள்கை வரைவு தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட உள்ளது. மேலும், பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையிலான தேசிய பேரவையின் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பான குறுகிய மற்றும் நடுத்தர கால வேலைத்திட்டங்களை இனங்காணும் உபகுழுவினூடாகவும் பொருளாதார ஸ்திரப்படுத்தல் தொடர்பாக குறுகிய மற்றும் நடுத்தர கால பொதுக் கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களை இனங்கண்டு அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டு, அதிமேதகு ஜனாதிபதியின்/பொருளாதார ஸ்திரப்படுத்தல் குழுவிடமிருந்து பெறப்படுகின்ற அறிவுறுத்தல்களின் பிரகாரம் பொருத்தமான விதத்தில் ஒரு தசாப்தத்திற்கான பொருளாதாரத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக இத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 182 இற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
பணிப்பாளர் நாயகம்
தேசிய திட்டமிடல் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : **உள்நாட்டு இறைவரித் திணைக்களம்**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 182

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்கான விசேட செயற்குழு கூட்டம்
2022 ஜூன் 15

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
<u>வருமான நிர்வாகம் தொர்பில் ஏற்கனவே மேற்கொண்டுள்ள நீண்ட கால மற்றும் குறுகியகால நடவடிக்கைகள்</u> உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் வரி நிருவாகம் தொடர்பில் ஏற்கனவே மேற்கொண்டுள்ள நீண்டகால மற்றும் குறுகிய கால நடவடிக்கைகள் • பதிவு, விபரத்திரட்டினைக் கோப்பிடல் மற்றும் வரிக்கொடுப்பனவிற்கான இ-சேவைகள் • தற்போதைய வரி விடயங்களுடன் இசைவாக்கம் அடைவதற்கான தேவைப்பாடுகளை வலைத் தளத்தினூடாக இற்றைப்படுத்தல் • 15 வங்கிகளுடன் இணையவழி வரிக் கொடுப்பனவுத் தளம் (OTPP) • வரி விபரத்திரட்டுக்கள் மற்றும் வரி கொடுப்பனவுகளை நன்றாக மேற்பார்வை செய்வதற்கு பாரிய வரிசெலுத்துநர்களை மீள்கட்டமைத்தல் மற்றும் வரிகளின் கணக்காய்வை விரிவுபடுத்தல், ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் வரையறுக்கப்பட்ட (8 முதல் 10 கோப்புகள் வரையில்) வரி கோப்புகளை ஒதுக்குதல் • நெருக்கடியான காலப்பகுதியில் மெய்நிகர் முறைமைகளைப் பயன்படுத்தியமை • வரி திருத்தங்கள், வரி விபரத்திரட்டுக்களை கோப்பிடல் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு சூம் (zoom)	தற்போதைய வரி விடயங்களுடன் இசைவாக்கம் அடைவதற்கான தேவைப்பாடுகள் வலைத்தளத்தினூடாக கிரம்மாக இற்றைப்படுத்தப்படுகின்றன. <u>அதற்கமைய வலைத்தளத்தினூடாக தரவிறக்கத்தின் கீழ்</u> பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படும். 1) வரிச் சட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டவுடனும் குறித்த வர்தமானி அறிவித்தல் வழங்கப்பட்டவுடனும் 2) அந்தந்த சட்டங்கள் தொடர்பான வரி வகைகளுக்கு ஏற்புடையதாக வழங்கப்பட வேண்டிய விபரத்திரட்டுக்கள் மற்றும் அட்டவணைகள் மற்றும் அவ் விபரத்திரட்டுக்கள் மற்றும் அட்டவணைகளை நிரப்புவதற்கான வழிகாட்டி 3) விரைவு வழிகாட்டி; <u>வலைத்தள வெளியீடுகளின் கீழ்,</u> 1) அந்தந்த சட்டங்கள் மற்றும் அறிவித்தல் மூலம் அங்கீகாரம் பெறப்பட்ட விடயங்கள் குறித்த விளக்கமளிக்கும் சுற்றறிக்கைகள் 2) வரிச் சுற்றறிக்கை – முற்பணக் கொடுப்பனவு, முற்பணத் தனி நபர் வருமான வரி அட்டவணை 3) வரைவிலக்கணங்கள் மற்றும் விதிப்புகள் 4) பகிரங்க விதிப்புகள் <u>வலைத்தளத்தின் பயனுள்ள தகவல்களின் கீழ்</u> 1) செய்திகள் மற்றும் அறிவித்தல்கள் – i. இதன் கீழ் ஒவ்வொரு வரிவகைக் கொடுப்பனவு தொடர்பாகவும் குறித்தொதுக்கப்பட்ட திகதி,

தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல் . • உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வலைதளத்தின் ஊடாக விழிப்புணர்வு வீடியோக்கள் மற்றும் யூ டியூப் என்பவற்றின் ஊடாக மேலும் விழிப்புணர்வை மேற்கொண்டமை • உத்தியோகத்தர்கள் வீட்டிலிருந்தவாறு வேலை செய்வதற்கு வசதி செய்தமை. • வரிசெலுத்துநர் பதிவு, வரி வகை பதிவு, கொடுப்பனவுகளை இற்றைப்படுத்தல் மற்றும் இசைவாணைச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் • வரிசெலுத்துநர்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 1944 அழைப்பு இலக்கத்தை அறிமுகப்படுத்தியமை.	காலப்பகுதிக் குறியீடு, வரிக் குறியீடு என்பன பற்றி அறிவித்தல். ii. வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள் பற்றி அறுவித்தல். iii. வரி செலுத்துனர் மற்றும் மக்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமாக அறிவித்தல். iv. புதிய திருத்தங்கள் மற்றும் சட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அது சம்பந்தமாக இலகுவாக அறிவுறுத்தல். 2022.03.22 முதல் 2022.07.05 வரையிலான புலனாய்வு காலப் பகுதியினுள் 24 அறிவித்தல்களும் 2022.07.06 முதல் 2023.01.27 வரையிலான காலப்பகுதியினுள் 53 செய்தி அறிவித்தல்களும் <u>செய்திகள் மற்றும் அறிவித்தல்களின்</u> கீழ் பிரசுரிக்கப்பட்டன. 2) வரி செலுத்துனர்களுக்கான வழிக்காட்டிக்கோவையின் கீழ் வரிசெலுத்துனர்களுக்கு ஆலோசனை வழங்கப்படும் இடம், பதிவுசெய்தல், இசைவானை சான்றிதழ் பெற்றுக்கொள்ளல் ஆகிய விடயங்கள் தொடர்பான இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. 3) ஒவ்வொரு மதிப்பீட்டாண்டுக்கும் ஏற்புடைய வரி வீதங்களை குறிக்கும் வரி அட்டவணை 4) ஒவ்வொரு வரி வகைகள் தொடர்பாகவும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய உரிய திகதி, விபரத்திரட்டு ஒப்படைக்கப்பட வேண்டிய உரிய திகதி என்பற்றை காண்பிக்கும் குறித்த ஆண்டின் வரி நாட்காட்டி 5) புதிதாக வரைத்தளத்திற்கு பதிவேற்றம் செய்யப்படும் விளம்பரங்கள். கட்டளைச்சட்டற்கள் என்பவற்றை வேறாக " புதிதாக உள்ளடக்கப்பட்ட பட்டியல் என " <u>வலைத்தள வரி வகைகளின் கீழ்</u> ஒவ்வொரு வரி வகைகள் தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை ஒவ்வொரு வரி வகைகளின் கீழும் வெவ்வேறாக காண்பித்தல்
<u>வருமான நிர்வாகம் தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள்</u>	<u>வருமான வரி</u>

• புதிய கொள்கை மாற்றங்களுடன் ஒன்றிய வகையில் அதிகரிக்கப்பட்ட வரி அடிப்படைகள் • புதிய கொள்கை மாற்றங்களுடன் ஒன்றிய வகையில் அதிகரிக்கப்பட்ட வரி அடிப்படைகள் உரிய வரிசட்டங்களுக்கான திருத்தங்கள் துரிதமாக பாரளுமன்றத்தில் நிறைவேற்றுதல் வேண்டும் என்பதுடன் வரி முறைகள் செய்யப்படுகின்ற மாற்றங்களை வரித் திருத்தங்களுக்கு அமைவானதாக மேற்கொள்ளுதல் வேண்டும். இதன் இறுதி நோக்கமாக அமைவது, இழக்கப்பட்ட வருமானத்தை ஈட்டிக்கொள்வதாகும். • வரிசெலுத்துநர்கள் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் • பங்குகள், பாரிய வரிசெலுத்துநர்கள் அலகு, மேல் அலகுகள் மற்றும் மத்திய நிறுவன அலகுகள் அடிப்படையில் வரி வருமான சேகரிப்பினை மேற்பார்வையிடல் மற்றும் அவற்றினை மீள்கட்டமைத்தல் • வரி மீதிகளை சேகரிக்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. • வரி விபரத்திரட்டு இணக்கப்பாடு மற்றும் சுய மதிப்பீட்டு கொடுப்பனவுகளை மேற்பார்வை செய்வதை வலியுறுத்தல் • அண்மையில் வழங்கப்பட்ட வரி மதிப்பீடுகளை (2018/2019 ஆம் வரிமதிப்பீட்டாணடிற்கு) மீளப்பெறுவதில் முன்னுரிமை வழங்குதல் • வரி அடிப்படையை விரிவாக்குதல் • கணக்காய்வினை விரைவுபடுத்தல் அடிப்படையில் மற்றும் அபாய அடிப்படையில் கணக்காய்வின் எண்ணிக்கைகளை அதிகரித்தல் • வரி நட்டங்கள் அறிக்கையிடப்பட்ட இடங்களில் நடவடிக்கைகளை கண்காணித்தல் • அண்மையில் வழங்கப்பட்ட வரி மன்னிப்புக்களின் கீழ் வெளிப்படுத்தல்களை முகாமைத்துவம் செய்தல்.	2021 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டத்தினூடாக குறைக்கப்பட்ட வரி அடிப்படையானது 2022 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டத்தின் மூலம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய வரி அடிப்படை செங்குத்தாகவும், கிடையாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அவையாவன, i. வரி மதிப்பீட்டாண்டு தொடர்பாக ரூபா 3 மில்லியன் ஆக காணப்பட்ட வரி விலக்களிப்பு கொடுப்பனவு 2023.01.01 முதல் செயல்வலுப்பெறும் வகையில் ரூபா 1.2 மில்லியன் வரைக் குறைக்கப்பட்ட்டமை. ii. ரூபா 1.2 மில்லியன் செலவின நிவாரணம் அகற்றப்பட்டமை. iii. 18% அதிகபட்ச தனிநபர் வரி வீதம் 36% ஆக அதிகரிக்கப்பட்டது 14% மற்றும் 24% ஆக காணப்பட்ட கூட்டிணைவு வருமான வரி 30% இற்கு ஒரு பெறுமதியாக அதிகரிக்கப்பட்டது. iv. தனி நபர் வருமான வரி தொடர்பான எல்லைகளுக்கிடையிலான பெறுமதியைக் குறைத்தல். v. முற்பணத் தனிநபர் வருமான வரி மற்றும் முற்பண வருமான வரி என்பவற்றிற்கான விருப்பினை கேட்டறியாது நிறுத்தி வைத்தல். <u>பெறுமதி சேர் வரி</u> i. பெறுமதிசேர் வரி தொடர்பான வரி பொறுப்பு எல்லையை 300 மில்லியனிலிருந்து 80 மில்லயனாக குறைத்தல். ii. வரி வீதம் 8% இலிருந்து 2022.07.01 முதல் 12% ஆகவும் 2022.09.01 முதல் 15% ஆகவும் அதிகரிக்கப்பட்டது. <u>சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு</u> 2022.10.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் வைகையில் 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டுச் சட்டத்தனை அமுல்படுத்தல். மேற்படி வரித் திருத்தம் தொடர்பான

• வரி வருவாயினை அதிகரிப்பதற்கு ஏனைய நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்	திருத்தச்சட்டகள் நிதி அமைச்சின் மூலம் வரைவு செய்யப்படுவதுடன், அதுதொடர்பான அவதானிப்புக்கள் உள்நாட்டு இறைவரித் தினைக்களத்தின் மூலம் வழங்கப்படுகின்றது. 1) வரிச் சட்டங்கள்தொடர்பான திருத்தங்கள் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அத் திருத்தச்சட்டங்களுக்கு அமைய வருமானத்தை திரட்டுக்கொள்ளும் பொருட்டு வரி செலுத்துனர்களினால் ஒப்படைக்கப்பட வேண்டிய விபரத்திரட்டுக்கள் திருத்தியமைக்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களின் போது அதனை மேற்கொள்ளல். 2) விபரத்திரட்டினை பூர்த்தி செய்வதற்குரிய வழிக் காட்டிக் கோவையை வெளியிடல். 3) வரித் திருத்தங்கள் தொடர்பாக ஏற்புடையதான சுற்றறிக்கைகளை வெளியிடல். 4) வரி செலுத்துதல் மற்றும் விபரத்திரட்டுகளை ஒப்படைத்தல் சம்பந்தமாக வரி செலுத்துநர்களை விழிப்பூட்டல் மற்றும் இற்றைப்படுத்தல் தொடர்பாக அடிக்கடி அறிவுறுத்தல்களை விடுத்தல். மேற்படி 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏற்கனவே வரி அடிப்படை விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. வரி நிவாரணங்களை அகற்றுவதன் மூலம் வரி வருமானத்தை அதிகரித்தல் மற்றும வரி விலக்களிப்புகளை அகற்றுவதன் மூலம் வரி கோப்புகளை அதிகரித்தல் தனியாள் வருமான வரிக்கு வருமான எல்லைகளுக்கிடையிலான பெறுமதியை குறைப்பத்தல், தனியாள் மற்றும் கூட்டிணைந்த வருமான வரி வீதங்களை அதிகரித்தல், பெறுமதி சேர் வரியின் வரிப்பொறுப்புக்களின் எல்லைகளை குறைத்ததுடன் வரி வீதங்களை அதிகரித்ததன் மூலம் தற்போதுள்ள கோப்புகளின் வருமானத்தை அதிகரித்தல். 2023 உத்தேச வரவுசெலவு திட்டத்தில் குறிப்புடப்பட்டுள்ளவாறு 18 வயதிற்கு மேற்பட்ட ஆட்கள் சம்பந்தமாக கோப்புக்களை திறப்பது குறித்த அமைச்சுடன் பேச்சு வார்த்தை இடம்பெற்று வருகின்றது. 2021 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கமைய வரி அறவிடப்படக்கூடிய

	வழங்களில், வருமானத்தில் அல்லது சொத்தின் ஒரு குறிப்பிட்டளவினை 2020 மார்ச் 31 ஆந் திகதியளவில் அல்லது அத்தினத்திற்கு முன்னர் வெளிப்படுத்தாத ஆளொருவருக்கு அச் சொத்துக்களை 2022.03.31 ஆம் திகதிக்கு முன்னர் அச் சொத்துக்களின் தற்போதைய வர்த்தகப் பெறுமதியின் 1% வரியினைச் செலுத்தி தன்னார்வ வெளிப்படுத்துகைக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதற்கமைய, 4200 கூற்றுக்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெற்றதுடன், அதில் 3110 கூற்றுக்கள் இது வரை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. வரி செலுத்துனர் காட்டும் இணக்கப்பாட்டுக்கு அமைய எஞ்சியக் கூற்றுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும், அல்லது நிராகரிக்கப்படும். சொத்துக்களின் தன்னார்வ வெளிப்படுத்தகையின் மூலம் வரியாக ரூபா. 4052 மில்லியன் தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் திரட்டப்பட்டுள்ளது. தன்னார்வ வெளிப்படுத்துகையின் போது திணைக்களத்துடன் பதிவு செய்துகொண்டதை ஊக்குவித்ததன் ஊடாக வரி கோப்புகளை உருவாக்குவதற்கான புதிய சந்தர்ப்பம் உருவாக்கப்பட்டது வரி செலுத்துநர்கள் மற்றும் அனைத்து பொதுமக்களுக்கும் வரிச் சட்டம் தொடர்பில் விளக்கங்களை அளித்தல்மற்றும் வரி விபரத்திரட்டுக்களை கோப்பிடல் தொடர்பில் விழிப்புணர்வினை மேற்கொண்டு அவ் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை "யூ டியூபில்" பதிவேற்றம் செய்தல்
<u>செயற்குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகள் தொடர்பான முன்னேற்றம்.</u> பிரதான சில நிறுவனங்கள் நிலுவை வரியை மீளச் செலுத்தாமை, மூன்றாகக் காணப்பட்ட வரி மேன்முறையீட்டுக் கட்டங்களை ஒரு கட்டமாக குறைத்தமை, 6 மாத காலப்பகுதிக்குள் வரி மேன்முறையீடுகளை விசாரணை செய்து நிறைவு செய்தல் மற்றும் வரி செலுத்துநர்களினால் வரி மதிப்பீட்டில் 50% ஐ அவசியம் செலுத்த வேண்டுமென குழுவினால் செய்யப்பட்ட பரிந்துரைகள் தொடர்பான முன்னேற்றம். உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் பழைய சட்டத்தின் பிரகாரம் (2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டம்) இரண்டு வருடங்களினுள் வரி மேன்முளையீடுகளை	2021.09.13 ஆம் திகதிய ACT 10/06 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் ஏற்புடைய விவரங்கள் நிதியமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அவதானிப்புக்களை வழங்குவது தொடர்பாக வரைவு கிடைக்கப்பெறவில்லை

முடிவுறுத்த சட்ட முறையில் கடப்பாடுடையவராவார். ஆகவே உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வகை கூறும் உத்தியோகத்தர், குழுவினால் குறிப்பிட்டவாறு 5 வருடங்களுக்கு அனுமதிக்கமுடியாது எனவும் குழுவினால் பரிந்துரை செய்தவாறு வரிமதிப்பீட்டின் 50% செலுத்தாவிடினும் வரிசெலுத்துநர் ஏதேனும் ஒரு தொகையேனும் செலுத்துதல் வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். அரச கணக்குகள் குழுவினால் (COPA) வழங்கப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்கிய அமைச்சரவை விஞ்ஞாபனம் அமைச்சரவை அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனவும் மேலதிக நடவடிக்கைகள் சட்ட வரைஞர்களினால் மேற்கொகள்ளப்படும் எனவும பிரதான வகை கூறும் உத்தியோகத்தர் குறிப்பிட்டுள்ளார். வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவிற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை உள்ளடக்கிய சட்டமூலம் வரையப்படுகின்றது. <u>பரிந்துரைகள்</u> • வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவினால் வரி மேன்முறையீடுகளை முடிவுறுத்த கூடிய நேரம் செலவழித்தல் மற்றும் நீண்ட காலத்திற்கு பிரதான கம்பனிகளால் வரி ஏய்பினை தவிர்ப்பதற்குமான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல்	
<u>பந்தயம் மற்றும் சூதாட்ட அ றவீட்டின் மீளப்பெறுகை (BGL)</u> உரிய வரித் தொகைகள் இரண்டு கம்பனிகளால் செலுத்தப்பட்டுள்ளது, ஏனைய வரிசெலுத்துநர்களுக்கு வரி செலுத்த முடியாமைக்கான காரணங்களை வெளிப்படுதுமாறு உயர் நீதிமன்றம் கட்டளை ஒன்றை பிறப்பித்துள்ளதாக வகை கூறும் உத்தியோகத்தர் குறிப்பிட்டுள்ளார் என்பதுடன் அவ் வழக்கானது இன்னும் நிறைவடையவில்லை. <u>பரிந்துரைகள்</u> • செலுத்த வேண்டிய வரிகளின் மீதித் தொகையினை மீளப்பெறுவதற்கு மாற்று வழிமுறைகள் ஏற்பாடு செய்யப்படுகின்றது.	• Marina Colombo Rank Entertainment Holding மற்றும் Star Dust Rank Entertainment Holding கம்பனிகளால் (ஒரே நபர்கள் இரண்டு கம்னிகளதும் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளது) நிறுவனத்தின் பணிப்பாளருக்கு பிராது வழங்கபட்டது முறையாக இல்லை என ஆட்சேபனை சமர்பிக்கப்பட்டுள்ளது. நீதவான் நீதிமன்றம் அவ் ஆட்சேபனையை நிராகரித்து வழக்கை தொடருமாறு கட்டளை இட்டுள்ளது. • சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய மீதி வரித் தொகைகளை செலுத்தாதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு எழுத்து மூல சமர்ப்பனங்களை சமர்பிக்குமாறு கட்டளையிடப்பட்டுள்ளதுடன் வழங்கானது 2022.06.28 ஆம் திகதிக்கு திகதி குறிக்கப்பட்டுள்ளது.

	• 2022.06.28 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆயினும், வழக்கானது 2022.07.19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதுடன் அது மீண்டும் 2022.08.23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. • 2022.08.23 ஆம் திகதி பிரதிவாதிகளினால் மீதி வரியினை செலுத்தாதது தொடர்பில் எழுத்துமூல சமர்பனங்கள் சமரபிக்கப்பட்டது. வாதி தரப்பினரால் பதிலினை கோப்பிடுவதற்கு 2022.09.27 ஆம் திகதிக்கு வழக்கு திகதி குறிக்கப்பட்டது. • 2022.09,27 அன்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பதில்கள் நீதிமன்றில் சமர்பிக்கப்பட்டது. 2022.11.29 ஆம் திகதி வழக்கு தீர்ப்புக்கு திகதியிடப்பட்டது. தீர்ப்புக்கு முன்னராக விசேட விடயங்கள் எதுவும் இருப்பின் நகர்த்தல் பத்திரத்தின் மூலம் அதனை 14 நாட்களினுள் வெளிப்படுத்த கட்டளை பிறப்பிக்கப்பட்டது. • 2022.11.08 ஆம் திகதி பிரதிவாதிகளினால் நகர்த்தல் பத்திரம் ஊடாக விடயங்களை குறிப்பிட்டு ஏற்புடைய மீதி வரியினை 12 வருடங்களினுள் தவணைக் கொடுப்பனவுகளாக செலுத்த "கொடுப்பனவு திட்டம்" ஒன்று சமர்பிக்கப்பட்டது. • அந்த "கொடுப்பனவு திட்டத்திட்டம்" மற்றும் பிரதிவாதிகளினால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களை உள்நாட்டு இறைவரி திணைக்களம் நிராகரித்தது. மான்புமிகு நீதவான் நீதிமன்றம் மீதி வரித்தொகையானது 7 மாதங்களினுள் செலுத்தப்பட வேண்டும் என கட்டளையிட்டது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வேண்டுதலின் பேரில், முதலாம் தவணைப் பணத்தை 2022.12.13 ஆம் திகதியினுள் செலுத்த மேலும் கட்டளையிடப்பட்டது. • வழக்கானது 2022.12.13 ஆம் திகதி பதில் நீதவான் முன்னிலையில் அழைக்கப்பட்டது. தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக

	கொடுப்பனவிற்காக பிரதிவாதி கம்பனிகளினால் பிறிதொரு திகதி கோரப்பட்டதுடன் அவை அடுத்த திகதியில் இரு தவணைப் பணங்களையும் ஒன்றாக தீர்க்க உடன்பட்டன. வழக்கானது 2023.02.24 ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டது. • நிலவரம் இவ்வாறு இருக்கையில் பிரதிவாதி திறத்தினர், நீதவான் நீதிமன்றின் தீர்ப்புக்கு எதிராக HC/RA/133/22 மற்றும் HC/RA/134/22 வழக்கு இலக்கங்களின் கீழ் மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில், திருத்தப்பட்ட விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ளன. இந்த திருத்தப்பட்ட விண்ணப்பத்தினூடாக, 2022.05.31 மற்றும் 2022.11.29 ஆம் திகதிகளில் நீதவான் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட கட்டளைகளை அகற்ற மற்றும்/அல்லது திருத்த கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. • இவ் வழக்கானது முதன்முறையாக 2020.11.31 மேல்நீதிமன்றத்தினால் அழைக்கப்பட்டது. தான் வழக்கிற்கு தோற்றமுடியாது என்று காரணம் குறிப்பிட்டு வழக்கானது பிறிதொரு நீதிபதிக்கு பாரப்படுத்தப்பட்டதுடன் வழக்கானது 2023/02/13 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டது.
<u>வரிதிருத்தங்களின் மூலம் எதிர்பார்க்கப்படும் வருமானம்</u> முன்மொழியப்பட்ட பெறுமதிசேர் வரி மீதான வரி விகிதங்கள் தற்போது சீராக்கப்பட்டு உள்ளதாகவும், 2022 ஜூலை 01 ஆம் திகதியளவில் அது நடைமுறைக்கு வருமெனவும், தற்போது தொலைதொடர்பாடல் வரி மீளப்பெறப்படுகின்றது எனவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வகை கூறும் உத்தியோகத்தர் குறிப்பிட்டுள்ளார். • 2022 அக்டோபர் 01 ஆம் திகதி தொடக்கம் ஏனைய வரிகள் செயற்படுத்தப்படுமெனவும், இவ் வரித் திருத்தங்கள் ஊடாக ரூபா 135 பில்லியனால் வருமானம் அதிகரிக்கும் எனவும் எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.	2022 இல் பாராளுமன்றத்தில் முன்மொழியப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டம் தொடர்பில், கீழ்வரும் வரி திருத்தங்களை முன் எடுக்க நிரல்படுத்தப்பட்டுள்ளது. 1. வருமாந வரி i. தனியாள் வருமான வரிக்குட்பட்ட எல்லை மற்றும் அதிகரித்துச் செல்லும் வரி வீதம் ii. கூட்டிணைக்கப்பட்ட வருமான வரி வீதங்கள் iii. உழைக்கும் போதே செலுத்தும் வரிக்குட்பட்ட (PAYE) எல்லை மற்றும் அதிகரித்துச் செல்லும் வரி வீதம். 2. 2022 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பெறுமதிசேர் (திருத்தச்) சட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்ட வரி வீதங்கள் கீழ்வருமாறு; i. பெறுமதிசேர் வரி வீதத்தினை 8%

	இலிருந்து 15% ஆக அதிகரித்தல் ii. பெறுமதி சேர் வரியின் எல்லையை 300 மில்லியனில் இருந்து 80 மில்லியன் ரூபாய்களாக குறைத்தல் 2022 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பெறுமி சேர் வரி (திருத்தச்) சட்டத்தினால் வரி வீதங்கள் மாற்றப்பட்டுள்ளன. அதற்க்கமைவாக பெறுமதி சேரி வரி வீதத்தினை 8% இலிருந்து 2022.06.01 அன்று 12% ஆக அதிகரிக்கப்ப்டது. அதற்கான வருமானம் 2022 ஆகஸ்ட மாத்ததிலிருந்து பெறப்படுகின்றது என்பதுடன் அவ் வரியானது 2022.09.01 ஆம் திகதி முதல் 15% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் வருமானம் 2022 நவம்பர் மற்றும் திசம்பர் மாதங்களிலிருந்து கிடைக்கப்பெறுகின்றன. பெறுமதி சேரி வரியின் எல்லை ரூபா 300 மில்லியனிலிருந்து ரூபா 80 மில்லியனாக குறைக்கப்பட்டமை 2022 ஒக்டோபர் முதலாம திகதி முதல் செயல்வலுப் பெறப்பட்ட போதும், 2022 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டமானது 2022, நவம்பர் 14 ஆம் திகதியே செயல்வலுப்பெற்றது. ஆகவே, பதிவானது அத்திகதியின் பின்னரே நடைபெற்றது. அதற்க்கமைவாக, திருத்தின் பிரகாரம் பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவுகள் 2023, சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களிலிருந்தே கிடைக்கப்பெற்றன. 2022 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டத்தின் பிரகாரம் 2022.10/01 முதல் வெயல்வலுப்பெறும் வகையில் கூட்டிணைக்கப்பட்ட வருமான வரி 30% ஆக அதிகரிக்கப்பட்டது. 2022.10.01 செயல்வலுப்பெற்ற 2022.10.22 ஆம் திகதியிடப்பட்ட உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டதமூலத்தினால் தனியாள் வருமான வரி வீதங்கள் அதிகரிக்கப்பட இருந்த போதிலும் அது உயர் நீதிமன்ற தீர்மானத்தின் பின்னர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் 2023.01.01 முதலே அதிக்கரிக்கப்பட்டது. பெறப்பட்ட வருமானத்திற்கு உட்படும் 2022.03.01 முதல் அமுல்படுத்தப்படவிருந்த சமூக பாதுகாப்பு உதவுதொகை அறவீடானது 2022.10.01 வரை பிற்போடப்பட்டது. 2022 ஆம வருடத்திற்கான வருமான எதிர்பார்ப்பு அடையப்பட்டது.
<u>சமூக பாதுகாப்பு பங்களிப்புவரி</u> இவ்வரியின் இறுதி வரிச்சுமை பாவனையாளர் மீது சுமத்தப்படுவதாலும் உத்தேச வருமானத்தை அரசாங்கத்தினால் சேகரித்துக் கொள்ள முடியாததனாலும் அத்தியாவசியப் பொருட்களை	ஏற்கனவே 2022 ஆம் ஆண்டின 25 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரிச் சட்டத்தின் முதலாவது அட்டவணையின் 1அ பகுதியின் மூலமும் 1 ஆ பகுதியின் மூலமும்

இவ்வரியிலிருந்து விடுவிப்பதற்கான இயலுமை உள்ளதா என பி.க அலுவலரினால் கண்டறியப்படல் வேண்டும்.	விலக்களிக்கப்பட்ட பொருடக்ளும, கபுதி II இன் மூலம் விலக்களிக்கப்பட்ட சேவைகளும் காண்பிக்கப்பட்டுள்ளன. இந்த முன்மொழிவானது 2022 ஆம் ஆண்டின் வரவுசெலவில் முன்மொழியப்பட்டது. 2022.06.21 ஆம் திகதிய சட்டமூலத்தின் பிரகாரம் இது 2022.07.01 முதல் செயல்வலுப்பெறவிருந்தது. எவ்வாறாயினும், சட்டத்தின் பிரகாரம் அமுல்படுத்தல் திகதி 2022.10.01 ஆக காணப்பட்டது. அத்துடன் மதிப்பிடப்பட்ட வருவாய் ரூபா 140 பில்லியனாக காணப்பட்டது. 2023.02.03 அன்று உள்ளவாறு மத்திய ஆவண முகாமைத்துவ அலகிற்கு (CDMU) 2,293 சமூக பாதுகாப்பு உதவுத்தொகை அறவீட்டு விபரத்திரட்டுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அவ் விபரத்திரட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள வரித் தொகை ரூபா 4,300,899,407.63 ஆகும் 2022 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் சமூக பாதுகாப்பு உதவுதொகை அறவீடானது 2022, நவம்பர் மற்றும் திசம்பர் மாதங்களிலேயே சேகரிக்கப்பட்டது. அதற்க்கமைவாக, 2022 ஆம் ஆண்டின் இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தின் வரித் திருத்தங்களின் பிரகாரம், 2022 ஆம் ஆண்டின் வருவாயை நேரடியாக பாதிக்கும் முன்மொழிவுகளாவன, 1. பெறுமதி சேர் வரியின் வரி வீதத்தை 8% இலிருந்து 15% இற்கு அதிகரிப்பது 2. சமூக பாதுகாப்பு உதவுத்தொகை அறவீட்டு விதிப்பு. இந்த முன்மொழிவுகளால் 2022 ஆம் ஆண்டின் இறுதியில், மேலதிக வருமானமாக ரூபா 117 பில்லியனை அடையக்கூடியதாக இருந்தது.
<u>பெறுமதி சேர் வரியின் தமாக்கம்</u> சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரியைப் போலன்றி பெறுமதி சேர் வரியின் வரிச் சுமை பல முறை பாவனையாளர்கள் மீது சுமத்தப்படுவதில் தாக்கமில்லை என உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் க. அ. தெரிவித்தார்	பெறுமரி சேர் வரியின் வரிச் சுமை பலமுறை நுகர்வோருக்கு சுமத்தப்படுவதில் பாதிப்பேதுமில்லை
<u>வரி மீதிகளை அறவிடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்</u> ரமீஸ் மற்றும் மரபு முறைகளின் கீழ் ரூபா 169 பில்லியன் வரி மீதியை சேகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 2022 மார்ச் மாதமளவில் ரூபா 15 பில்லியன் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வகை கூறும் உத்தியோகத்தர் குறிப்பிட்டுள்ளார்.	2022.12.31 அன்றுள்ளவாறு மரபு முறைமையின் கீழ் ரூபா 45,557,020,546.00 வரி மீதியினையும் ரமீஸ் முறைமையின் கீழ் ரூபா 12,109,479,896 இனையும் சேகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், 2022 ஆம் ஆண்டிற்குரிய மொத்த தொகையான ரூபா 57,666,500,442.00

	இனை அறவிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
<u>அரசாங்கத்தினால் அதிகளவில் வரிச் சலுகைகள் வழங்கப்பட்டமை</u> அரசிற்கு ஏற்படும் வருமான இழப்பு தொடர்பாக அரசாங்கத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை இத் தீர்மானம் காரணமாக நாட்டுக்கு ஏற்படக்கூடிய மோசமான விளைவுகள் தொடர்பில் நிதி அமைச்சிற்கு அறிவித்ததாக க.அ. தெரிவித்தார்	"சௌபாக்கிய தக்ம" என்ற கொள்கைக்கு அமைவாக எடுக்கப்பட்ட அமைச்சரவை முடிவுகளின் அடிப்டையில் ஏற்புடைய வரி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 182 இற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 182

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்கான விசேட செயற்குழு கூட்டம்
2022 ஜூன் 15

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
<u>செயற்குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சம்பந்தமான முன்னேற்றம்</u> பிரதான கம்பனிகள் சிலவற்றினால் நிலுவைக் குத்தகை திருப்பி செலுத்தப்படாமை, மூன்று கட்ட வரி மேன்முறையீட்டை ஒரு கட்டம் வரை குறைத்தமை, 06 மாதங்களுக்குள் வரி மேன்முறையீட்டை விசாரணை செய்து முடிவுறுத்துதல் மற்றும் வரி செலுத்து வோரினால் வரி மதிப்பீட்டில் 50% சதவீத கட்டாய கொடுப்பனவை செய்தல் வேண்டும் என்பதாக செயற்குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சம்பந்தமான முன்னேற்றம் பழைய சட்டத்தின் கீழ் (2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சட்டம்) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் 2 வருடங்களுக்குள் வரி மேன்முறையீட்டு விசாரணை செய்து முடிவுறுத்துவதற்கு சட்டரீதியாக கடமைப்பட்டுள்ளார். அதனால் செயற்குழுவினால் காட்டப்பட்டுள்ளவாறு ஐந்து வருட காலம் அதற்கான அனுமதி கிடைப்பதில்லைஎனவும், செயற்குழுவினால் முன்மொழிவுயப்பட்டுள்ளவாறு வரி மதிப்பீட்டின் 50% சதவீத தொகையை செலுத்தாவிடினும், வரி செலுத்துபவரினால் குறிப்பிட்ட அளவு தொகையை வரியாக செலுத்த வேண்டும் எனவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரச கணக்கு குழுவினால் வெளியிடப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்கிய அமைச்சரவை விஞ்ஞாபனம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனவும் சட்ட வரைஞரினால் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்திரினால் தெரிவிக்கப்பட்டது. வரி மேல்முறையீட்டு ஆணை குழுவுக்கு மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்கள் உள்ளிட்ட சட்ட வரைவு, வரைவு செய்யப்பட்டு வருகின்றது. பரிந்துரைகள் - வரி மேன்முறையீட்டு ஆணைக் குழுவினால் மேன்முறையீடு ஒன்றினை விசாரணை செய்து முடிவெடுத்துவதற்கு நீண்ட காலம் செல்கின்றமை மற்றும் நீண்ட காலமாக பிரதான சங்கங்களினால் பரி செலுத்தாமல்	2011 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க வரை மேல்முறையீட்டு ஆணைக்குழு திருத்த சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆனைக்குழுவானது 9 உறுப்பினர்களைக் கொண்டதாக மூன்று குழுக்களை உள்ளடக்கி இருத்தல் வேண்டும் என காட்டப்பட்டுள்ளது. இருப்பினும் ஆணைக்குழு ஆரம்பத்திலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை தலைவர் உட்பட 2 உறுப்பினர்கள் மாத்திரம் நியமனம் பெற்று ஒரு குழு மாத்திரம் செயற்பட்டது. 2020.01.01 ஆம் திகதி முதல் 2022.07.02 ஆம் திகதி வரை ஆணைக்குழுவின் சட்டத்திற்கு அமைவாக ஆனைக்குழு 9 உறுப்பினர்களைக் கொண்டதாக 03 குழுவும் செயலில் இருந்துள்ளது. வரி மேல்முறையீட்டு ஆணைக்குழு தலைவர் உள்ளிட்ட 05 பேரினது பதவிக்காலம் 2022.07.02 ஆம் திகதியுடன் முடிவுற்றது. மேலும் 2022.09.01 ஆம் திகதியிலிருந்து குழு உறுப்பினர்கள் 9 பேர் நியமிக்கப்பட்ட அதே வேளையில் 2022.09.20 ஆம் திகதியில் இருந்து 3 குழுக்களும் செயல்படுகின்றது. அதற்கு அமைவாக 3 குழுக்களும் ஒரு வாரத்தில் மேற்கொள்ளப்படுகின்ற கூட்டங்களின் எண்ணிக்கையை அதிகரித்தபடியினாலும் ஒரு கூட்டத்தின்போது விசாரணைக்கு எடுக்கப்படுகின்ற வழக்குகளில் எண்ணிக்கை அதிகரித்துள்ள படியினாலும் 2021 ஆம் ஆண்டு வரை பதிவு செய்துள்ள வரி மேல்முறையீட்டு விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க வரி மேல்முறையீட்டு ஆணைக்குழு திருத்த சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணை குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக 10 நபர்களுக்கு மேற்படாத ஆரம்ப சபை எனும் பெயரில் அழைக்கப்படும் ஆலோசனை சபையொன்று இருத்தல் வேண்டும். நீண்ட காலமாக வெற்றிடமாக இருந்த இந்த பதவியை 2022.12.12 ஆண் திகதியிலிருந்து நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதேவேளையில் அதற்கு அமைவாக 08 சட்ட ஆலோசனை உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆலோசனை

புறக்கணிப்பதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.	சபையின் உறுப்பினர்களை பூர்த்தி செய்வதன் மூலமும் வரி மேல்முறையீட்டு தீர்மானங்களை துரிதமாக எடுக்கக் கூடியதாக இருக்கும். மேன்முறையீட்டு வழக்கு தீர்மானங்களை தட்டச்சு செய்வதை துரிதப்படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டில் புதிதாக அனுமதிக்கப்பட்ட 05 அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பதவி வெற்றிடங்கள் தற்போது நிரப்பப்பட்டு உள்ளன. அதன் மூலமும் வரி மேல்முறையீட்டு தீர்மானங்களை வெளிப்படுத்துவதை துரிதப்படுத்த கூடியதாக இருக்கும்.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 182 இற்காக வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவுக்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
செயலாளர்
வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு

திணைக்களத்தின் பெயர் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 182

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்கான விசேட செயற்குழு கூட்டம்
2022 ஜூன் 15

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு தொடர்பான பரிந்துரைகள் இந்த வரியின் இறுதிச் சுமை நுகர்வோர் மீது விழுவதனாலும், மற்றும் அரசாங்கத்தால் எதிபார்க்கப்படும் வருமானம் சேகரிக்கப்பட முடியாததனாலும், அத்தியவசியப் பொருட்களின் மீதான சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டின் விதிப்பிற்கு விலக்களிப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்தல்.	- மருந்தாக்கப் பொருட்கள் போன்ற அத்தியவசியப் பொருட்களுக்கு ஏற்கனவே சமூகப் பாதுகாப்பு உதவுத் தொகை அறவீட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. - வரி மூலம் வருவாய் இழப்புக்களைத் தவிர்ப்பதற்காக சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டிற்கு வழங்கப்பட்ட விலக்குகள் குறைந்தபட்ச மட்டத்தில் வைக்கப்பட்டுள்ளன. - மேலும், வரி செலுத்துவோரது பல்வேறு பிரிவினர்களுக்கான வரிவிதிப்புகளுக்கான வெல்வேறு அடிப்படைகளால், அடுக்கடுக்கான விளைவு குறைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக விநியோகஸ்தர்களுக்கு புரள்வில் 25 சதவிகிதம் வரி விதிக்கப்படும் அதேநேரம், மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத்திற்கு புரள்வில் 50 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது. - இருப்பினும் பல்வேறு பங்குதாரர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில், சில பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு எதிர்காலத்தில் அறவீட்டிலிருந்து விலக்களிக்கப்படவுள்ளன.
வருவாய் சேரிப்பினை மேம்படுத்துவதற்கும், பண அனுப்பீடுகளின் வரவை அதிகரிப்பதற்குமான முன்மொழிவுகள் - எல்லை தாண்டிய மின் - வணிகத்தின் (E-Commerce) வரிவிதிப்பு - குறிப்பாக அடையாளம் காணப்பட்ட பொருட்களுக்கான வரிகளை அறிமுகப்படுத்துதல்/ அதிகரித்தல், உ-ம்: 50 - 55, 58 மற்றும் 60 ஆம் அத்தியாயங்களின் கீழ் துணிவகைகளுக்கு பெறுமதி சேர் வரியைப் (VAT) பயன்படுத்துவதைக் கருத்திற்கொள்ளல், தற்போதுள்ள தீர்வைக் கட்டமைப்பானது எடையின் மீது பொருந்தக்கூடிய செஸ் வரியைக் கொண்டிருப்பதால், இந்தப் பொருட்கள்	இது தொடர்பான பல முன்மொழிவுகள் திறைசேரிக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன, அவை வரி மறுசீரமைப்புக்களின் ஆரம்பத் தொகுதிக்கான நடைமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் பரிசீலிக்கப்படும். துணிகளுக்குத் தற்போது பெறுமதி சேர் வரிக்காக பூச்சிய விகிதத்தில் வரி விதிக்கப்படுகிறது. பெறுமதி சேர் விரியின் கீழ் வழங்கப்பட்ட வரி விலக்குகளின் எதிர்வரும் மீளாய்வின் கீழ் இது பரிசீலிக்கப்பட்டு, பயனற்றதாகக் கண்டறியப்பட்டால் அகற்றப்படும்.

பொதுவாக மிகைப்பெறுமதியிடப்படுகின்றன.	

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 182 இற்காக அரசிறைக் கொள்கைத் திணைக்களத்திற்குரிய நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் பொதுக் கணக்கு பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சம்பந்தமான தகவல்களை மேலே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்/
பணிப்பாளர் நாயகம்
அரசிறைக் கொள்கைத் திணைக்களம்